# கைத்தடி


மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

2 ஆம் ஆண்டு

▪ தடி-2, அடி-1 ▪ ஏப்ரல் 2018 ▪ தனிச்சுற்றுக்கு மட்டும் ▪ நன்கொடை ரூ.20




## போர்க்குரல்

## பெண்கள் மறக்கலாமா பெரியாரை ?

சுப.வீரபாண்டியன்

## மூடநம்பிக்கைகளின் தாய் கடவுள் நம்பிக்கையே!

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்

வடலூர் துரை. சந்திரசேகரன்

நேர்காணல்



கைத்தடி

மாத இதழ் சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

# விளம்பர நன்கொடை

| | |
|---|---|
| பின் பக்கம் வண்ணம் (Full page) | ₹5000/- |
| உள் பக்கம் வண்ணம் (Full page) | ₹3000/- |
| உள் பக்கம் வண்ணம் (Half page) | ₹1500/- |
| உள் பக்கம் கருப்பு வெள்ளை (Full page) | ₹1000/- |
| உள் பக்கம் கருப்பு வெள்ளை (Half page) | ₹500/- |

கைத்தடி விளம்பர பிரிவு: 73733 33078


kaithadimonthly@gmail.com
























## வாசகர் பார்வையில்

**சா**திமத வெறியாலும் மூடநம்பிக்கையாலும் புரையோடிப் போயிருக்கும் இன்றைய தமிழ் சமூகத்தின் புத்தியில் தந்தை பெரியாரின் கருத்துக்களால் மாற்றத்தைக் கொண்டுவர அரும்பாடுபட்டு இந்த கைத்தடி செயலியை வழங்கிய அனைத்து தோழர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி வாழ்த்துகள்.

**– பாஸ்கர், சென்னை**

**இ**ந்தப் புத்தகம் பல இளைஞர்கள் இடையே கொண்டு செல்லவேண்டும்.

**– ரஞ்சித் குமார், சென்னை**

**ச**முதாய சீர்திருத்தம் அடைய உங்கள் கைத்தடியின் முற்போக்கு சிந்தனைகள் மிகவும் சிறப்பு.

**– வீரவேல், கடலூர்**

**த**ந்தை பெரியாரின் பணிமுடிக்க தீரத்துடன் எழுத்துக்களமாடும் தன்மானமிக்க சுயமரியாதை மாத இதழான கைத்தடி எளியவடிவில் எல்லோருக்கும் கிடைக்கிறது. படியுங்கள் !பயனடையுங்கள் !

**– ரங்கராஜன், கடலூர்**

## முதலாளி – தொழிலாளி தொல்லை

**தோ**ழர்களே, தாய்மார்களே,

இன்று பொதுவாகவே உலகம் முழுவதும் ஒரு தொல்லை இருக்கிறது. அந்தத் தொல்லை பல்வேறு உருவங்களில் காட்சியளிக்கின்றது. அந்தத் தொல்லை என்னவென்றால், மனித சமுதாயத்தில் உடையவன் - இல்லாதவன் என்ற தொல்லை. இந்தத் தொல்லை உலகம் முழுவதும் நீக்கமற நிறைந்துள்ளது. மனிதன் இயற்கையாகவே ஆசை குடிகொண்டுள்ள ஜீவன். அதன் பயனாகத்தான் உலகில் உடையவன்-இல்லாதவன் என்கின்ற இரண்டுவித நிலைமைகள் உண்டாகிவிட்டன. இந்த நிலைமைகளை மதமும் கடவுளும் பாதுகாத்து வருகின்றன. அதற்கு ஏற்ப அரசாங்கமும் அமைந்துவிடுகிறது.

ஆனால், நம் நாட்டைப் பொறுத்தவரையில் உடையவன் - இல்லாதவன் என்கின்ற கவலையோடு மற்றொரு கவலையும் சேர்ந்துகொண்டது. அதுதான் சமுதாயத்தில் மேலான சாதி, கீழான சாதி என்று பாகுபடுத்தப்பட்டுள்ள தொல்லை. இந்தத் தொல்லை உலகில் வேறெங்கும் இல்லாத தொல்லை. இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. நம் மக்களிடம் குடிகொண்டுள்ள முட்டாள் தனத்தினாலும் மானமற்ற தன்மையினாலும் இந்தத் தொல்லை நீண்டநாட்களாக நம்மடையே இருந்துவருகிறது. உடையவன்-இல்லாதவன் என்ற தொல்லையை ஒழிக்க உலகில் போராட்டம் நடந்தபடியே உள்ளது. அதைக் காக்க சட்டம், வெடிகுண்டு, ஆகாயக் கப்பல், அணுகுண்டு ஆகிய அனைத்தும் உண்டு. ஆனால், மேல்சாதி-கீழ்சாதி என்ற குறை அஸ்திவாரம் இல்லாமலேயே வளர்ந்தது. நம் மக்களின் முட்டாள்தனமும், மானமற்ற தன்மையும் சேர்ந்து தான் அதை வளர்த்து நம் சாட்டில் நிலைநிறுத்தி வைத்துள்ளன. அதை நீக்க நாம் முயல வேண்டும். உடையவன்-இல்லாதவன் என்ற தொல்லை நீங்க உலகில் கிளர்ச்சிகள் நடந்தபடியே உள்ளன. தொழிலாளர்கள் கிளர்ச்சி, விவசாயிகள் கிளர்ச்சி ஆகிய கிளர்ச்சிகளெல்லாம் முதலாளித்துவம் நிலைக்க உபயோகப்படுகின்றனவே ஒழிய அடிப்படையை மாற்றியமைக்கவில்லை. நம் நாட்டிலுள்ள மேல்சாதி-கீழ்சாதிக் கொடுமை அஸ்திவாரம் இல்லாததும் மூடநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதுமாக இருப்பதால் கிளர்ச்சிகள் செய்ய முடியாதபடி தந்திரமாக அமைந்துள்ளது. இங்கு சாதித்தொல்லைகளை ஒழிக்கப் பாடுபட வேண்டியது தான் முதல் தேவை என்பது என் கருத்து.

முதலாளி-தொழிலாளி என்கிற பிரச்சினை எங்கிருந்து வந்தது? மூடநம்பிக்கையிலிருந்து வந்ததல்ல. அந்தப் பிரச்சினை ஆதாரத்தோடு தான் உள்ளது. எப்படி இருக்கிறான் முதலாளி? சட்டத்தின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் பாதுகாப்பின்படி இருக்கிறான். அரசாங்கத்தின் சலுகையால் தான் அவன் முதலாளியாக வாழ முடிகிறது. ஆகையால், முதலாளி கூடாது என்றால் அவனைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் மீது திரும்ப வேண்டும். முதலாளி மீது பாய்வதால் பலன் ஏதுமில்லை. முதலாளி மீது போராட்டம் துவக்கி, தொழிற் சங்கங்கள் இந்த அய்ம்பது வருட காலமாகச் சாதித்தது என்ன?

**– (பொன்மலையில், 27–9–1953இல் சொற்பொழிவு**
**– 'விடுதலை' 3–10–1953)**

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

இணையாசிரியர்:
**பார்த்திபன்.ப**

உதவி ஆசிரியர்:
**கா. தமிழரசன்**

ஆசிரியர் குழு:
**புலவர் நாகை பாலு** த.மு.எ.ச.
**முனைவர் கு. முருகேசன்**
**முனைவர் ச.அருண்பிரகாஷ்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன், ஜோதி வெங்கடாஜலபதி**

ஓவியர்கள்:
**தனுவசி சி.தர்மராஜ், ஓவியர் சிகரன்,**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப்,** 76677 55673

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி, தே.சுரேஷ், அரவிந்த், கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா,** வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்,** வழக்கறிஞர்

ஆசிரியர் குழு - அலுவலக முகவரி

கைத்தடி
மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

**மதி பப்ளிகேசன்**
தருமபுரி - 635 205
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்: kaithadimonthly@gmail.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| பெண் என்றால் மானுடம் | 5 |
| வடலூர் துரை. சந்திரசேகரன் - நேர்காணல் | 6 |
| கைத்தடி இதழின் ஓராண்டுப் பயணம் | 10 |
| சமற்கிருதத் திணிப்பும், சமஉரிமை பறிப்பும் தேவபாஷையின் தேவையென்ன? | 12 |
| அரசு அலுவலகங்களும் ஆதிக்கச் சாதிகளும் | 14 |
| மந்திரமா? தந்திரமா? | 15 |
| சிரியாவில் இன்று நடப்பதென்ன? | 16 |
| எச்சில் தொட்டி | 18 |
| பெண்கள் மறக்கலாமா பெரியாரை? | 20 |
| நன்றி! நன்றி!! நன்றி!!! | 21 |
| தூங்கியது போதாதா? | 22 |
| அன்றும்... இன்றும்! | 24 |
| வழக்கறிஞர் அ.அருள்மொழி - நேர்காணல் | 26 |
| தமிழர் விளையாட்டுகள் | 29 |
| வரும் முன் காப்போம் | 30 |
| அன்பு சகோதர சகோதரிகளுக்கு மு.சி.அறிவழகன் எழுதுவது...! | 31 |
| புரட்சியாளர் எப்படித் தலைவரானார்? | 32 |
| போர்க்குரல் - கவிதை | 34 |



| கைத்தடி சந்தா விபரம் | தனி இதழ் ₹ 20 |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 250 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 470 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 950 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1200 |

A/C NO: 34939017347
IFSC CODE : SBIN0000832
NAME : ARIVAZHAGAN.C
PHONE NO : 7373333078
State Bank of India, Dharmapuri

டி.எஸ்.எஸ்.மணி

# பெண் என்றால் மானுடம்



'உலகப் பெண்கள் தினம்' ஆண்டு தோறும் வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஊடகங்கள், சில "பெண் சாதனையாளர்களை" பற்றி எழுதுவது, காட்டுவது என கடந்து செல்வார்கள். இந்த முறையும் அப்படி ஆங்கிலக் காட்சி ஊடகம் ஒன்றில் பதிவு செய்யும்போது, அந்த சாதனையாளர்கள் 'பெண்' என்பதால் எப்படி 'கடினங்களை எதிர்கொண்டு தாண்டி' வந்தார்கள் என்பதையும் குறிப்பிட்டது.

நாம் எல்லோருமே 'கண்ணை' பெரிதும் பாதுகாக்க வேண்டும் என எண்ணுபவர்கள்தான். ஆனாலும், "கேட்ராக்ட்" என்ற திரை வளர்ந்து விடுகிறது என வருத்தப்படுகிறோம். அந்த கேட்ராக்ட்டை 'எடுத்து விடுவதற்காக' 'லேசர் அறுவைச் சிகிச்சை' என்ற நவீன முறையைக் கையாள்கிறோம். அந்த லேசர் முறையை 'கண்டுபிடித்தவர்' ஒரு பெண். 1981இல், 'பேட்ரிகா எக்சா பாத்' என்ற பெண்மணி தான் அந்த 'லேசர் முறையை' ஆய்வு மூலம் அறிமுகப்படுத்தியவர். 2000மாவது ஆண்டில் அதே 'பேட்ரிக்கா' இன்னொரு உரிமத்திற்காக பரிசு பெற்றார். அது, 'அல்ட்ரா சவுண்ட்' மூலம், 'கேட்ராக்ட்' திரையை விலக்கும் கண்டுபிடிப்பை அறிவித்தார்.


கிரேஸ் ஹாப்பர்

கறுப்பர் இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியான, 'பேட்ரிக்கா' 'வெள்ளை இனத்தவர் ஆதிக்கம் செலுத்தும்' ஒரு 'ஆணாதிக்க சமூகத்தில்' சாதாரண மக்களுக்கும் பயன்பாடாகக் கூடிய ஒரு 'கேட்ராக்ட்' விலக்கும் முறையைப் பயன்படும்படி கண்டுபிடித்ததும், பயன்பட்டதும் பாராட்டத்தக்கது.

இன்றைய உலகம் இளைஞர்களின் கைகளுக்கு மாறி வருகிறது. இளைஞர்களோ, இணையத்தின் கைகளில் தவழ்ந்து வருகிறார்கள். இணையத்தை முழுமையாகச் சார்ந்தே வாழும் நமக்கு, அதன் முக்கிய கண்டுபிடிப்புகளை வெளிக் கொண்டு வந்தவர்களில், 'கிரேஸ் ஹாப்பர்' என்ற பெண்மணியைத் தெரிந்திருக்க வேண்டும். அவர் கணினிகளைப் புரட்சிகரப்படுத்தியவர். (ஐ.பி.எம்.மின் மார்க் 1) அது பல கணித பிரச்சனைகளைத் தீர்க்க உதவியது. ஆங்கிலத்தை, கருவியின் கோடுக்கு மாற்ற உதவியது. அவரது சம கால ஆண்களால், ஒரு பெண்ணாக இருக்கும் காரணத்தால், கிரேஸ் ஹாப்பர் தொடர்ந்து உற்சாகப்படுத்தப்படாமல், உளவியல் அளவில் அணுகப்பட்டார். சவாலுக்கு உள்ளாக்கப்பட்டார். தனது தொடர் முயற்சிகளினால், 'சாதனையை' எட்டிய பிறகு, அவர் பாராட்டப்பட்டார். நவீன கணினிப் பயன்பாட்டை இன்று இருக்கும் நிலைக்கு உயர்த்தியவர்களில் பேசப்படுகிறார்.

டி.என்.ஏ. என்ற மானுடத்தின் அடிப்படை பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளில், பல அறிவியலாளர்கள் பாராட்டப்படுகின்றனர். பிரான்சிஸ் கிரீக், ஜேம்ஸ் வாட்சன், மவுரிஸ் வில்கின்ஸ், ஆகியோர் டி.என்.ஏ.யின் இரட்டை ஹெலிக்ஸ் கட்டமைப்புக்காக பாராட்டப்படுகின்றனர். ஆனால் அவர்களது கண்டுபிடிப்புகளுக்கு, அடிப்படையான, 'முக்கிய பிம்ப புள்ளிவிவரத்தை' (குறிப்பாக இமேஜ் 51) 'ரோஸலிண்ட் பிராங்கிளின்' என்ற பெண்மணியால் கண்டுபிடிக்கப்பட்டது ரோஸலிண்ட் உடைய கண்டுபிடிப்பு இல்லாமல், மேற்கூறிய மூன்று ஆண் அறிவியலாளர்களும், தங்களது 'நோபல் பரிசை' பெற்றிருக்க முடியாது. ரோஸலிண்ட் பிராங்கிளின் தனது மறைவுக்கு பிறகே 'அங்கீகரிக்கப்பட்டார்'. வில்கின்ஸ், க்ரீக்கிடமும், வாட்சனிடமும், பிராங்கிளினிடம் 'அனுமதி பெறாமலேயே' 'இமேஜ் 51ஐ காட்டிவிட்டார் என்கின்றனர். இல்லாவிட்டால், பிராங்கிலே கூட, டி.என்.ஏ. கட்டமைப்பை வெளிக் கொண்டு வந்திருக்கலாம். எது எப்படியோ, அறிவியலின் புதிய கண்டுபிடிப்பின் அவர்களே பிராங்கிளினின் கண்டுபிடிப்பை ஒப்புக்கொள்கிறார்கள். பெண் என்ற காரணத்தால், ஆணாதிக்க அறிவியல் உலகம் கூட இப்படித்தான் என்பதற்கு இதுவே உதாரணம்.

அறிவியல் உலகில், 'மேரி க்யூரி' நோபல் பரிசை பெற்றார். ரேடியோ ஆக்ட்டிவிட்டி என்ற கதிர் வீச்சு பற்றி கண்டுபிடித்தார். முதலாம் உலகப் போர் காலத்தில், போர்க் களத்தில் பயன்படுத்த, 'நகரும் எக்ஸ்ரே' கருவியைக் கண்டுபிடித்தார். அவர் கண்டுபிடித்த 'பொலோனியம்' அவரது சொந்த நாடான, போலந்து பெயரில் அழைக்கப்பட்டது. பெண் என்ற காரணத்தால், மேரி க்யூரி 'க்ரகோவ் பல்கலைக்கழகத்தில்' சேர மறுக்கப்பட்டார். அவர்தான் இன்றைய வரலாற்றில் புகழ் பெற்று நிற்கிறார்.


மேரி க்யூரி

பெண்களின் வாழ்க்கையில், 'மார்புக் கச்சையை' (பிரா) அணிய 'சௌகரியமான ஒன்றை' உருவாக்கித் தந்தவர், 'க்ரேஸ் கிராஸிலி' என்ற பெண்மணி. எளிமையான, நெளிவு சுளிவான ஒரு 'பிராவை' அவர் கைக்குட்டைகளைப் பயன்படுத்தி, கண்டுபிடித்து, உருவாக்கித் தந்தவர்.

1914ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அதற்கான, காப்புரிமையைப் பெற்றார்.

இவ்வாறு பெண் சாதனையாளர்கள் பலர் இருந்தாலும், எப்படி 'ஆணாதிக்க அறிவியல் உலகம்' பெண் சாதனையாளர்களை 'மேலே வர விடாமல்' உற்சாகம் இழக்கச் செய்ய வழி செய்தது என அது பற்றிய உண்மைகளைக் கூட நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றே.

– தொடரும்

# மூடநம்பிக்கைகளின் தாய் கடவுள் நம்பிக்கையே!

மாணவர் பருவம் தொட்டு தந்தை பெரியாரை, அன்னை மணியம்மையாரை, தமிழர் தலைவர் ஆசிரியரை நேரில் பார்த்தும் பேசியும் அவர்களின் கட்டளைகளுக்கு ஏற்ப கழகப் பணியாற்றியவரும், கழகத்தின் பல்வேறு பொறுப்புகளை வகித்தவருமான, இன்றைய திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர்களுள் ஒருவருமான வடலூர் துரை. சந்திரசேகரன் அவர்களுடன் சில நிமிடம்...



**வடலூர் துரை. சந்திரசேகரன்**

**பொதுச் செயலாளர் - திராவிடர் கழகம்**

**நேர்காணல்**

**? அன்னை மணியம்மையார் பிறந்தநாளை ஏன் எழுச்சியோடு கொண்டாடப்பட வேண்டும்...?**

அறிவுலக ஆசான் தந்தை பெரியாரின் மறைவுக்குப்பின் உடல் நலம் குன்றிய சூழலிலும் பெரும் புயலுக்கு நடுவே ஒளிவிளக்கைப் பாதுகாப்பாக அணையாமல் கொண்டு செல்லும் நிலையில் திராவிடர் கழகத்தை வழிநடத்திச் சென்றவர்.

தந்தை பெரியாரின் மறைவுக்குப் பின் திராவிடர் கழகம் இருக்குமா? என்று வெகுளித்தனமாக கேள்வி கேட்டவர்கள் உண்டு. விசமத்தனமாக ஆசைப்பட்டவர்களும் உண்டு. அவர்களுக்கெல்லாம் அதிர்ச்சி வைத்தியம் தருவது போன்று அன்னையார் செயல்பட்டதுதான் வியப்பு.

பல்லாயிரம் பேர் திரண்டிருந்த அந்த துயரச் சூழலில் அன்னையார் சொன்னார்..... 30 ஆண்டு 3 மாதம் 13 நாட்கள் பெரியாருடன் இருந்தேன், அவரால் வாழ்ந்தேன்.... அவருக்காக வாழ்ந்தேன். இனியும் அவரின் கொள்கைக்காக வாழ்வேன். . . அவரின் இயக்கத்துக்காக வாழ்வேன் என்ற உறுதி முழக்கத்தை வெளிப்படுத்திய விந்தை... அனைவர் உள்ளத்திலும் பால்வார்த்தது.

பெரியாரின் இயக்கத்துக்கு - பகுத்தறிவு இயக்கத்துக்கு ஒரு பெண்மணி தலைமை தாங்கியதும், விராங்கனையாய் செயல்பட்டதும் ஒரு உலக சாதனைதான்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகக் கோரி அஞ்சலகங்கள் முன்னால் அறப்போர் நடத்தினார்...

அதைத் தொடர்ந்து தமிழகம் வந்த மத்திய அமைச்சர்களுக்கு கருப்புக்கொடி காட்டும் போராட்டம் நிகழ்த்தினார்...

‘மிசா’ எனும் கருப்புச் சட்டத்தை ஏவி ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்த இந்திராகாந்தி தமிழகம் வந்தபோது அவருக்கு எதிராகத் தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்தும் வண்ணம் ‘கருப்புக்கொடி காட்டி” ‘திரும்பிப் போ” என முழங்கிய தீரமிகு அன்னையாராய் சென்னையை குலுங்கச் செய்து நூற்றுக்கணக்கானத் தோழர்கள் காவல்துறையால் கைது செய்யப்பட்டு காராகிருகத்தில் அடைக்கப்பட்டனர்.

*Thiru. Ravana Vs. Sri Rama. . .* வீராங்கனையாய் அன்னையாரை இந்தியத் துணைக் கண்டமே திரும்பிப் பார்க்கும் வண்ணம் நடத்தப்பெற்ற நிகழ்வு ‘இராவண லீலா”. ஆம், டெல்லியில் ‘ராம் லீலா” நடத்தப்பட்டு இராவணன் உருவம் தீயிட்டு எரிப்பது என்பது தென்னாட்டு மக்களை, குறிப்பாகத் திராவிடர்களை இழிவுபடுத்தும் செயலாகக் கருதுகிறோம், கதையாக கற்பனையாக, கதாபாத்திரங்கள் இருந்தாலும் அதில் தமிழர்கள் இழிவுபடுத்தப்படுவதை

அனுமதிக்க முடியாது. இராம் லீலா அங்கே நடந்தால் இங்கே ‘இராவண லீலா” நடத்துவோம், ‘பேடி’ இராமன் உருவத்தை எரிப்போம்” என்றார் அன்னையார். அதுபோலவே ‘இராவண லீலா” நடத்தப்பட்டது சென்னையில் உணர்வுப் பேரலையாய், எழுச்சி எரிமலையாய் தோழர்கள் ஆயினர். திட்டமிட்டவாறு சென்னை பெரியார் திடலில் இராவண லீலா நடந்தது. அன்னை மணியம்மையாரும் மேலும் தோழர்கள் சிலரும் கைது செய்யப்பெற்றனர். வெற்றிகரமாக அன்னை இட்டதீ மூண்டு இராமனை, இலட்சுமணனை, சீதையை சுட்டுப் பொசுக்கியது - நாள் 25.12.1974

இல்லஸ்டிரேட் வீக்லி ஏடு இந்நிகழ்வைப்பற்றி எழுதும்போது *Thiru. Ravana Vs. Sri Rama...* என தலைப்பு போட்டு கழகத்தின் போராட்டத்தை விளக்கி போராட்டத்தின் நியாயத்தை உலகறியச் செய்தது.

கருணை மழை மேகத்தைக் காலம் காக்கும் என்பார்கள். அப்படித்தான் அன்னையார் 1976இல் மிசா கொடுமைக்கு ஆட்பட்டு எப்போது விடுதலை என்று தெரியாமல் சிறையிலடைக்கப்பட்டு இருந்த தோழர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று தக்க உதவிகளை செய்ததுடன், ஆறுதலை, தைரியத்தை குடும்பத்தினர்க்கு வழங்கினார்.

வீட்டுக்கு வீடு பெண்ணைப் பூட்டி வைத்து பழங்கதை பேசும் நாடு நம் நாடு. பெண்ணுக்கு வாய்ப்பும் உரிமையும் மறுக்கப்பட்டிருந்த சூழலில் 1943இல் அன்னையார் பெரியாருக்கு சேவை செய்ய தம் வீட்டை விட்டு வெளியே வந்தது என்பது எப்பேர்பட்ட செயல்?

இளமையை-வாழ்வை ஒரு தலைவருக்காக, ஒரு இயக்கத்துக்காக தத்தம் செய்யும் மனத்துணிவு எத்தனைப் பேருக்கு வரும்? பெண் குலத்தின் பொன்விளக்காய் அம்மா வந்தார். அய்யாவுக்கு அருந்தொண்டாற்றினார்.

இயக்கத்தின் பாதுகாப்பு ஏற்பாடாக பெரியார் செய்த ஏற்பாடு தான் பெரியார்-மணியம்மை திருமணம் என்பது. தனிப்பட்ட ஆசாபாசத்துக்கு இடமே இல்லை. ஆனால் எத்தனை ஏச்சு, பேச்சு, ஏகடியம், கண்டனம், நாட்டில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. அத்தனையையும் தாங்கிக்கொண்டு தான் கே.ஏ.மணி ஈ.வெ.ரா.மணியம்மையானார். அறிஞர் அண்ணா சொன்னதைப் போல் ‘தந்தை பெரியாரின் நீண்ட ஆயுளின் இரகசியம் அன்னை மணியம்மையார்தான் என்பதற்கொப்ப பெரியாரை 95 ஆண்டு காலம் பாதுகாத்து பெருமை பெற்றார்.

அய்யா பெரியாருக்குப்பின் இயக்கத்தைப் பாதுகாத்ததைப் போல, தமது மறைவுக்குப் பின்னாலும் இயக்கம் கட்டுக்கோப்பாக இயங்கிட, அறக்கட்டளை சொத்துக்களை பாதுகாப்பாக நிறுத்திட ஆசிரியர் அய்யா அவர்களை பெரியார் அறக்கட்டளை, பெரியார் மணியம்மை அறப்பாதைக் கழகம் இவற்றின் ஆயுட்கால செயலாளராக நியமனம் செய்து சென்ற செயல் சாதாரண செயல் அல்ல, பெரியாரின் ஏற்பாடு, எண்ணம் எந்த அளவு சரியானது என்று மெய்ப்பித்தார் அம்மா.

கவிஞரின் எழுத்துப்படி மணியம்மையார்-பெண்ணில் மணிதான், இயக்கத் தோழர்கள் அனைவர்க்கும் அவர் கண்ணில் மணிதான்.

### ? புதிய கல்விக்கொள்கை, நீட் இதை எப்படி பார்க்கிறீர்கள்...?

கல்வி 1976 வரை மாநிலங்களின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. மாநில உயர்வு, மொழி, பண்பாட்டுக் கூறுகளை கல்வியின், மூலம் வழங்கிடும் வாய்ப்பு அதனால் உண்டு, தாய்மொழி வழிக்கல்வி பாடத்திட்டம், தேர்வுமுறை என கல்விக்கான வளர்ச்சி நோக்கிய முடிவுகளை மாநில அரசே முடிவெடுத்திட முடியும். 3.1.1977 முதல் கல்வி மாநிலப்பட்டியலிலிருந்து மத்திய அரசின் மேலாதிக்கம் கொண்ட ‘பொது அதிகாரப்பட்டியலுக்கு, வஞ்சகமாகக் கொண்டு செல்லப்பட்டது, அதன் மூலம் பல்வேறு இழப்புகளை, உரிமைகளை கல்வி சந்திக்க வேண்டிய அவலநிலை தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டது.



வாஜ்பேய் ஆட்சிக்காலத்தில் மனிதவளமேம்பாட்டுத் துறை அமைச்சராக முரளிமனோகர் ஜோஷி எனும் ஆர்.எஸ். எஸ். பார்ப்பனர் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் ஜோதிடம், வேதக்கல்வி, வேத பொறியியல், யோகா என்றெல்லாம் புகுத்தியதும், சமஸ்கிருதமயப்படுத்த முனைந்ததும் எதைக் காட்டுகிறது? தமிழ்நாட்டில் காமராசர் பல்கலைக் கழகத்தில் நுழைக்கப்பட்டதா இல்லை?

2001 மக்கட்தொகை கணக்குப்படி 102.86 கோடி மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் வெறும் 14,135 பேர் மட்டுமே பேசுவதாக பதிவு செய்துள்ள சமஸ்கிருதத்தை கல்வித்திட்டத்தில் நுழைத்திட முனைவதன் காரணம் என்ன? செத்த மொழி என்று உலகில் அறியப்பட்ட ஒரு மொழிக்கு சிங்காரம் தேவையா? சடங்கு மொழியாக-மந்திர ஸ்லோகங்களாக இருக்கும் ஒரு மொழியை பாடத்திட்டத்தில் நுழைப்பதா? இதற்காகத்தான் தேசிய புதிய கல்விக் கொள்கையா? வேற்றுமையில் ஒற்றுமை காணும் தேசத்தில் ஒரே கல்விக் கொள்கை எப்படி சாத்தியம்? தேசியம் என்ற பேரால் எதுவந்தாலும் நாம் எதிர்த்து முறியடிக்க வேண்டும்.

கிராமங்கள் தோறும் கல்வி என்பதை ஒழிக்க, சமூக நீதியை குழிதோண்டிப் புதைக்க, குழந்தை தொழிலாளர் முறையை ஊக்குவிக்க, மாணவர்களை பல்வேறு முறைகளில் வடிகட்டி, மிண்டும் ஒரு குலக்கல்வித் திட்டத்தை கொண்டு வரவே தேசிய கல்விக் கொள்கை. மதச்சிறுபான்மை, மொழிச் சிறுபான்மையரின் பள்ளிகளை - உரிமைகளை நசுக்கவே இந்த கொள்கை.

பல்வேறு மத, மொழி, தேசிய இனங்கள் என பரந்து வாழும் பன்முகத் தன்மை உடைய நாட்டில், பல்சமுதாய பிரதிநிதித்துவம் இல்லாத வெறும் இந்துத்துவா-ஆர்.எஸ்.எஸ். குழுவால் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் கொள்கையை எப்படி அனைவருக்கும் பொதுவானது என்று ஏற்றுக் கொள்ள முடியும்? ஒற்றை ஆரிய கலாச்சாரத்தை திணிக்க முயலும் தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்து முறியடிக்க வேண்டியது நமது கடமை. திராவிடர் கழகம் புதிய தேசிய கல்விக் கொள்கையை அதனால் தான் எதிர்த்து செயலாற்றுகிறது.

அதுபோலவே தேசிய பொது நுழைவுத் தேர்வு என்பதும் மோசடியானது. தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைப்பதற்காக, ஏழை-எளிய கிராமப்புற மாணவர்களின் மருத்துவ ஆசையை முளையிலேயே கிள்ளி எறிவதற்காக மோடி அரசால் கொண்டுவரப்பட்டதே ‘நீட்” 1 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து பெறும் மதிப்பெண்ணுக்கு எந்தவித

மரியாதையும் இல்லையாம் - 'நீட்"டில் பெறும் மதிப்பெண்ணே எம்.பி.பி.எஸ். சேர்க்கையை தீர்மானிக்கும் என்றால் இது மோசடியான முறைதானே. அரசாலும், நீதிமன்றத்தாலும் நிராகரிக்கப்பட்ட நுழைவுத் தேர்வு முறையை மத்திய அரசு வேண்டும் என்றே நீட் என்ற பேரால் கொண்டு வருகிறது என்றால் - மாநில உரிமையை பறித்திடும் சூழ்ச்சி தானே. தமிழநாட்டில் 90 சதவிகித மாணவர்கள் மாநில பாடத்திட்ட முறையில் படிப்பவர்கள். 10 சதவிகித பேரே மத்திய பாடத்திட்ட முறையில் (சி.பி.எஸ்.இ.) படிப்பவர்கள். சி.பி. எஸ்.இ. பாடத்திட்ட அடிப்படையிலேயே 'நீட்" தேர்வுத்தாள் தயாரிக்கப்படும் என்றால் சமபோட்டிக்கான வாய்ப்புண்டா? தமிழில் சி.பி.எஸ்.இ. பாட நூல்கள் உண்டா? கிராமப்புற ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களை எந்த அளவு பாதிக்கும்? அதனால் தான் அரியலூர்-குழுமூர் அனிதா 'நீட்"டை எதிர்த்து தமது உயிரையே ஈகம் செய்ய வேண்டிய அவலம். 1200க்கு 1176 மதிப்பெண் வாங்கிய தாழ்த்தப்பட்ட ஏழை குடும்பத்தைச் சேர்ந்த அனிதாவுக்கு எம். பி.பி.எஸ். சேர்க்கையில் இடம் கிடைக்காமல் செய்ததே 'நீட்"

இந்தியா முழுவதும் ஒரே முறையான நுழைவுத் தேர்வு என்று ஏன் சொல்கிறது? வடநாட்டு மாணவர்களை, பார்ப்பனர்களை தமிழ்நாட்டு கல்வி நிறுவனங்களில் நுழைப்பதற்கே.

சமூகநீதி மற்றும் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதான கல்விக்காக.... நாட்டின் முன்னேற்றத்தின் வளர்ச்சிக்கும், பயன்படும் கல்விக்காக, அனைத்து மக்களுக்குமான கல்விக்காக சமத்துவ சமுதாயத்தை நோக்கிய கல்விக்காக நாம் 'நீட்" தேர்வை எதிர்க்கிறோம். எவ்வளவு காலம் போராடுவது என்று நீங்கள் கேட்கலாம். நீட் அகற்றப்படும் வரை நமது போராட்டம் ஓயாது என்பதே திராவிடர் கழக நிலை. 'நீட் நீட்டானது அல்ல, நேர்மையற்றவர்களால், மோசடிப் பேர்வழிகளால் கொண்டு வரப்பட்ட மாநில உரிமையை, நமது மருத்துவக் கனவை பறிப்பதற்காக கொண்டு வரப்பட்ட மோசடி தேர்வு முறையே ஆகும். நீட்டை முறியடித்திட டெல்லியிலேயே களம்காண இருக்கிறது திராவிடர் கழகம்.

## ? கடவுள் – மதம் மூடநம்பிக்கை இம்மூன்றையும் எப்படி பார்க்கிறீர்கள்...?

மூடநம்பிக்கை என்பது தொற்று நோய் போல, கால வெள்ளத்தில் மக்களை காவு கொள்ளும் கொள்ளை நோய் என்று கூட சொல்லலாம். மூடநம்பிக்கை மனித வளர்ச்சிக்குத் தடை. அறிவு வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மனப்பான்மைக்கும், சிந்தனை வளர்ச்சிக்கும் தடை. அச்சமும், ஆசையும், தன்னம்பிக்கை இன்மையுமே மூடநம்பிக்கைக்கு அடிப்படை. நகர்ப்புற மக்களைக் காட்டிலும் கிராமப்புற மக்களே பெரிதும் மூடத்தனத்துக்கு இலக்காகின்றனர். ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகம் மூடநம்பிக்கையில் மூழ்கிப் போகின்றனர்.

புற்றீசல் போல மூடநம்பிக்கைகளை மூலதனமாகக்கொண்டு போலிச் சாமியார்கள் புறப்படுவதும் பிரேமானந்தாக்கள் முதல் நித்யானந்தாக்கள் வரை, சாயிபாபா முதல் சங்கராச்சாரி வரை, கல்கி, அமிர்தா, பங்காரு என எத்தனை எத்தனை அவதாரங்கள் உலாவருவதும் மக்களை மயக்கி உல்லாசிகளாக வாழும் அவலம் நம் நாட்டில் தான் அதிகம்.



குறிசொல்வோராக - அருள்வாக்கு அருள்பவராக - பரிகார பூசை நடத்துபவராக - யாகயோகங்கள் செய்பவராக - தோஷம் கலைப்பவராக - மோசம் செய்வோரின் எண்ணிக்கை இந்து மதத்துக்குள்ளே ஏராளம்... ஏராளம்...

கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம், மோசடி, போதை, விருந்துகள், சூழ்ச்சிகள், முறைகேடுகள், ஏமாற்றுவித்தைகள் அவர்கள் மூலம் சமுதாயத்தில் மலிந்து கிடக்கின்றன. சாமியார்களின் வண்டவாளங்களை திராவிடர் கழகம் மக்கள் மத்தியில் பரப்பினாலும் அவர்கள் மீதான மோகம் குறைந்துள்ளதா? ஒருவன் போனால் இன்னொருவன் வந்துகொண்டே இருக்கிறான். இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளைத் தகர்த்து பகுத்தறிவுப் பாதையில் உங்களை பயணிக்கச் செய்யவே பெரியார் வழியில் நாங்கள் போராடி வருகிறோம்.

மூடநம்பிக்கைகளின் தாய் கடவுள் நம்பிக்கையே. மதம் பற்றுதலே. கடவுள் நம்பிக்கை மனிதனின் மூளைக்கு போடப்பட்ட விலங்கு. தளைகளிலே கொடிய தளை மூளைக்கு இடப்பட்ட தளைதான். அறிவு அற்றம் காக்கும் கருவி என்கிறது வள்ளுவம். அறிவுக்குத் தடை என்கிறது மவுடீகம். அறிவுக்கு விடுதலை தா என்கிறது பகுத்தறிவு இயக்கமான திராவிடர் கழகம். கையிலோ, காலிலோ விலங்கு பூட்டப்பட்டிருந்தால் கண்ணுக்கு உடனே தெரியும் - உடைத்துக்கொண்டு விடுதலை அடைய வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். ஆனால் மூளைக்கு போடப்பட்டுள்ள விலங்கு உடனடியாகத் தெரியாததால்.... விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கை தாமதமாகிறது. தத்துவப் பேராசான் தந்தை பெரியார் தமிழனின் மூளைக்குப் போடப்பட்டள்ள விலங்கை ஒடிக்க வந்த பகுத்தறிவுப் பகலவன். அவரால் உருவாக்கப்பட்ட சுயமரியாதை இயக்கமும், திராவிட கழகமும் தொடர்ந்து பெரியாரின் எண்ணத்தை ஈடேற்றி மக்களின் உள்ளத்திலிருந்து, பழக்கவழக்கத்தில் இருந்து கடவுள் - மத - வேத - இதிகாசப்புரட்டுகளை வெளியேற்றி புதியதொரு பாதையில் நடை பயிலச்செய்ய உழைத்து வருகிறது. அந்த வகையிலே தான் காமலாபுரத்தை பெரியார் புரமாக - பகுத்தறிவு புரமாக மாற்றிட மான உணர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் உள்ளவர்களாக ஆக்கிடும் அறிவார்ந்த பரப்புரை நிகழ்ச்சிகளை நடத்துகிறோம். கட்சியால், ஜாதியால், மதத்தால் மாறுபட்டு நிற்கும் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவும், உரிமையுள்ளவர்களாய் ஆக்குவதற்காகவும் தமிழர் தலைவர் ஆசிரியர் தலைமையிலே பாடுபட்டு வருகிறோம். எங்களுக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை. மானுடப்பற்று ஒன்றையே கொண்டு போராடி வருகிறவர்கள் நாங்கள் எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இருக்கக்கூடாது - சமத்துவ சமுதாயம் படைக்கப்பட வேண்டும் என்று பாடுபட்டு வருபவர்கள் நாங்கள்.

## ? தாங்கள் பொதுச் செயலாளரக அங்கம் வகிக்கும் திராவிடர் கழகம் பற்றி ..?

படிப்பு மறுக்கப்பட்ட மக்கள் நாம். அதனால் வேலை வாய்ப்புக்கு செல்ல முடியாதவர்களானோம். உரிமையும், வாய்ப்பும் மறுக்கப்பட்டவர்களாகக் கிடந்தோம்.

அடிமைப்படுத்தி ஆதிக்கம் செய்தது ஆரியம். உழைக்காது வாழ பார்ப்பனர்களால் முடிந்தது: உழைத்தும் வாழக் கதியற்றோராக கிடந்தோம் நாம். உற்று நோக்கினார் பெரியார். உடைத்து நொறுக்கினார் பார்ப்பனர் தம் மேலாதிக்கத்தை. எழுச்சி பெற்றோம் - ஏன்? எல்லாமும் பெற்றவரானோம். காரணம் பெரியாரும், பெரியாரின் இயக்கமான திராவிடர் கழகமுமே. இன்று வரை தமிழ் மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கேடாய் எது வந்தாலும் அதை எதிர்த்துப் போராடி வீழ்த்தும் பணியிலே திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்களே முன் நிற்கிறார்.... முனைப்பு காட்டுகிறார். அவரின் தலைமையிலே இயங்கிடும் திராவிடர் கழகத்திலே... தன்மான பகுத்தறிவு இயக்கத்திலே இளைய தலைமுறையே சேரவாரீர். ஊராரே வாரீர். திராவிடர் கழகம் ஒப்புமை இல்லா இயக்கம். மனித சமத்துவத்துக்காக போராடிவரும் இயக்கம். உண்மை - நேர்மை - நியாயம் - எளிமை இவற்றை கவசமாகக் கொண்டு சமரில் ஈடுபட்டுள்ள இயக்கம். இன்னமும் நிறைய பேர் சேருங்கள். பெரியார் கொள்கை எனும் ஒளிவீச்சால் உயர்வு பெறட்டும் உங்கள் ஊர். அனைத்து விதமான ஒடுக்குமுறையிலிருந்தும் மக்களை மீட்டெடுத்து விடுதலைக் காற்றை, சமத்துவக் காற்றை எல்லோரும் சுவாசிக்க பெரியாரை நேசியுங்கள். பெரியாரின் நூல்களை வாசியுங்கள், வாழ்வில் வளம் பெருகும்: நலம் சூழும்.

## ? பெரியார் சிலை உடைப்பு இதை எப்படி உணர்கிறீர்கள்...?

தேன்கூட்டிலே விரலை விட்ட கதை போல....

பாம்பு புற்றிலே கைவிட்ட கதை போல...

தீக்குள் விரல்பட்டதை போல்...

தமிழ் மக்களின் மானத் தலைவர் பெரியார். சமநீதி மறுக்கப்பட்ட மக்களுக்கு சமூகநீதி கிடைக்கச் செய்த பெம்மான். உழைத்து உருக்குலைந்த கூட்டத்தின் வாழ்வுரிமைக்கு வழிகாட்டிய தீரர். பெண்ணடிமைப் போக்கி, பெண்ணுரிமை பெற்றிட புயலைப்போல் சீரிய சீலர். கடவுள்-மத-புராணம்-இதிகாச-சாஸ்திர-சம்பிரதாய மடமைச் சரக்குகளை மண்ணுக்குள் இட்டு மூடிட சளைக்காது சமர்புரிந்த போராளி. தமிழர்களின் முகவரி. சுருக்கமாகச் சொன்னால், அவரின் சிலையை உடைப்பேன் என்றான் ஒரு உளுத்தன். பேரலையாய் நாடெல்லாம்... தமிழர் வாழும் ஊரெலாம் எழுச்சிப் பிரவாகம் உடைத்துப்பார் உளுத்தனே உருத்தெரியாமல் ஆக்குவோம் உன்னை... உன் கூட்டத்தை என ஆர்த்தெழுந்தது தான் தாமதம்... அந்த உளுத்தன் சொன்னான்... நானில்லை என் அட்மின் என்று. இதுநாள் வரை எந்த ஒரு பிரச்சனைக்கும் பதில் சொல்லிப் பழக்கமில்லாத பிரதமர் மோடி, பா.ஜ.க. தலைவர் அமித்ஷா 'சொன்னது தவறு' 'அப்படி யாராவது செய்தால் நடவடிக்கை எடுப்போம்' 'தலைவர்களின் சிலை மரியாதைக்குரியவை' என்றனர் 24 மணி நேர அவகாசத்தில். ஈடு இணையற்ற தலைவராய் எல்லோர் மனத்திலும் இடம்பெற்றுள்ளார் பெரியார் என்பது எல்லோராலும் உணர முடிந்தது. தமிழர் தலைவரின் எச்சரிக்கை... தமிழகத் தலைவர்களின் கோபாவேச கண்டன குரல்... தோட்டத்துப்புடலங்காய் அல்ல தமிழர்நாடு என்பதை இந்துத்துவா கும்பலுக்குப் புரியவைத்தன. தந்தை பெரியார் மண் தன்மானச் சிங்கங்களின் அணிவகுப்பு என்பதை தெரியவைத்தன... நாடெங்கும் எழுந்த அதிர்வலைகள்.

அமைதியாய் இருப்போம்: கட்டுப்பாடு காப்போம் என்பது ஒரு கட்டம் வரைதான். பெரியாரின் சிலைமீதே கைவைப்பாய் என்றால்... எதையும் இழப்பதற்கு தயாரானவர்கள் நாங்கள் என்பதை... வன்முறையை வன்முறையால் சந்திக்கத் தயார் என்பதை கருஞ்சிறுத்தை பட்டாளம் வெளிப்படுத்தியது. விளைவு மோசமாகும்... தேன் கூட்டிலே கைவைக்கிறீர்கள் பார்ப்பனர்களே... இந்துத்துவா வாதிகளே... எச்சரித்தார் தலைவர். பணிந்தனர்... பெரியாரை... அவரின் ஆளுமையை மக்கட் செல்வாக்கைப் புரிந்து கொண்டதற்கு... ஒரு வாய்ப்பு.

பெரியார் கொள்கை எனும் கவசத்தை அணிந்து நிற்கிறோம் களத்தில். எங்கள் உள்ளமெல்லாம் பெரியார் நிறைந்திருக்கிறார். அவரால் வீரியம் பெற்ற நாங்கள் எதிரிகளை களமாடிடத் தயார்... தயார்...

## ? திராவிட இயக்கங்களின் தாய் கழகமாக இருக்கும் திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி பற்றி, பொதுச்செயலாளராக அய்யாவோடு தொடர்ந்து பயணிக்கும் அனுபவங்கள் பற்றி...

தந்தை பெரியாரின் அறிய கண்டெடுப்பு ஆசிரியர், பால பருவம் தொடங்கி 85 வயதை எட்டி இருக்கக்கூடிய இந்நாள்வரை கொண்ட கொள்கையில் வழுவாது பயணிப்பவர். பவள விழா கண்ட பொதுவாழ்வில் ஒரே கொள்கை, ஒரே தலைமை, ஒரே இயக்கம், ஒரே கொடி என நிலையாகத் தொண்டாற்றி வருபவர் தமிழர் தலைவர். பெரியார் கொள்கையை உலகளாவிய அளவில் கொண்டுபோய் சேர்த்தவர், பெரியாரின் விழா இன்று உலகத்தின் பல நாடுகளில் முன்னெடுக்கப்படுவதற்கு அவரே காரணம், பெரியார் காண விரும்பிய சாதி அற்ற மூடநம்பிக்கை நீங்கிய பெண்ணடிமை இல்லாத சமத்துவ சமுதாயத்தை உருவாக்குகின்ற பணியில் தொய்வின்றி ஈடுபட்டு வருபவர். பெரியார் காலத்தில் தமிழகம் பெற்ற இட ஒதுக்கிடு 49 விழுக்காடு இவரின் தொடர்ந்த போராட்டத்தால் இடஒதுக்கீட்டின் அளவு 69 விழுக்காடாக உயந்தது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் 69 விழுக்காடு உள்ளது. மத்திய அரசின் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு கிடைக்கச் செய்ததில் இவரின் பங்கு மிகையானது, மண்டல் குழு அறிக்கை அமலாக்கதிற்காக திராவிடர்கழகத்தின் பங்களிப்பு அளப்பரியது. இன எதிரிகளால் இவர் தாக்கப்பட்ட போது நாடாளுமன்றத்தில் 'வீரமணிக்கு ஜிந்தா பாத்' என்று வடபுலத்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் பாராட்டப்பட்டவர். யாருக்கும் எதற்கும் அஞ்சாது பெரியார் கொள்கையை முன்னெடுப்பவர் உலகத்தின் ஒரே பகுத்தறிவு நாளேடான 83 ஆண்டுகால வரலாறு படைத்த 'விடுதலை' ஏட்டின் நீண்ட கால ஆசிரியர், இடஒதுக்கிடு, பகுத்தறிவு, மொழி உரிமை, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமை என்பதற்காகவே தொடர்ந்து போராளியைப் போல் போராடி வருபவர். பெரியார் கொள்கையின் பால் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களை ஈர்த்து வருபவர். இன்றைக்கு எரியும் பிரச்சனையாக உள்ள பெரியார் சிலை உடைப்போம் என்ற இந்துத்துவா வெறியர்களின் ஆணவப் போக்கை எதிர்த்து தமிழ்நாட்டுத் தலைவர்களை ஒருங்கிணைத்ததும், இவரின் எச்சரிக்கை உடன் கூடிய கண்டனமும் எதற்குமே பதில் சொல்லாத மோடியையும் அமித்ஷாவையும் அசைத்தது 24 மணி நேரத்திற்குள்ளாக பதில் உரைக்க வைத்ததில் இவரின் ஆளுமைக்கு உதாரணம். பெரியார் மண்ணில் மதவெறிக்கோ சாதி வெறிக்கோ இடமில்லை என்ற நிலை ஏற்பட இவரின் உழைப்பு அடிப்படை. ●



# கைத்தடி இதழின் ஓராண்டுப் பயணம்...

நீண்டகால கனவு எப்படியாவது ஒரு இதழ் ஆரம்பிக்க வேண்டும் என்றெல்லாம் வாய் கூசாமல் பொய் சொல்லிவிட்டுக் கடந்து செல்ல நீண்ட நேரம் ஆகாது. குழந்தைப் பருவம் முதல் பகுத்தறிவுக் கூட்டங்களில் கலந்துகொண்டதும், பகுத்தறிவு சார்ந்த தோழர்களைத் தொடர்ந்து சந்தித்ததும் தான் திடீர் என்று இப்படி ஒரு இதழ் துவங்குவதற்கான காரணம். சமூக வலைத்தளமான முகநூலும் இதற்கு ஒருவகைக் காரணம் என்று சொல்லலாம். இதை விட பெருமையாகச் சொல்லவேண்டுமானால் பெரியார் தொண்டனுக்கே உரிய முரட்டுத்தனமான தன்னம்பிக்கையே இதற்கும், தொடர் முயற்சிகளுக்கும் காரணம் என்று சொல்வதே சரியாக இருக்கும். காரணம் என்னவென்றால் கடவுள் நம்பிக்கை கொண்ட ஒருவனாக இருந்து இருந்தால் நிச்சயம் நானும் எடுத்த செயலுக்கு எல்லாம் கல் சிலை முன்போ சிலை வடிவம் கொண்ட புகைப்படம் முன்போ நின்று “கடவுளே என்னைக் காப்பாற்று” என்று முணகிக்கொண்டு தான் இருந்து இருப்பேன் அதில் அய்யம் ஏதும் இல்லை.

என்னுடைய முரட்டுத்தனமான தன்னம்பிக்கைக்குக் காரணம் என்னுடைய பெற்றோரும் நண்பர்களும் தான். எல்லோரும் சொல்வது போல என்னுடைய பெற்றோரும் நண்பர்களும் தான் தொடர்ந்து என்னை ஊக்கப்படுத்தி தொடர்ந்து செயல்பட வைத்தார்கள் என்று வாய் அளவில் சொன்னால் சிறப்பாக இருக்காது. உண்மையில் யாரெல்லாம் இந்த இதழுக்கு வாழ்த்துகள் சொல்கிறீர்களோ அவர்களெல்லாம் உண்மையில் வாழ்த்து சொல்ல வேண்டியது என்னுடைய பெற்றோருக்குத்தான். ‘நீ செய்தால் சரியாக தான் இருக்கும் முட்டி மோதி எழுந்து வா’ என்று சுயமாய் சிந்திக்க முடிவு எடுக்க வழியை உருவாக்கி கொடுத்தார்களே அவர்களுக்கு தான் அந்த நன்றிகள் வாழ்த்துகள் சென்று சேர வேண்டும், அதுதான் நியாயமும் கூட!

மார்ச் மாதம் இதே நாள் அதாவது இன்று கட்டுரையை எழுதிக் கொண்டு இருக்கும் அதே நாள் மார்ச் 22- 2017, இப்படியாக ஒரு இதழ் ஆரம்பிக்க வேண்டும் என்று தோன்றியது. சற்றும் சிந்திக்கவில்லை நாளை என்ன நடக்கும் என்று. ஆனால் தொடர்ந்து எந்தமாதிரியான முன்னெடுப்புகள் எடுக்க வேண்டும் என்ற சிந்தனை மட்டும் மனதில் இருந்தது, ஓராண்டு மின்னிதழாக நடத்துவோம் என்ற முடிவுக்கு வந்தேன், அதை ஒரு அச்சகத்தில் பகிர்ந்தேன் குறைந்த விலையில் கருப்பு வெள்ளையில் நான் செய்து கொடுக்கிறேன் என்று ஒரு மாற்றுத் திறன் நண்பர் சொல்லியதோடு பல அனுபவங்களைப் பகிர்ந்தார் வீட்டில் ஒரு பொய்யைச் சொல்லி எப்படியோ 2000 ரூபாயைத் தயார் செய்தேன், இதழ் தயார் ஆனது எப்படி அறிமுகம் செய்வது என்று புரியவில்லை செலவு செய்ய கையில் பணமும் இல்லை, கல்லூரி நண்பர்களை அழைத்தேன் அவர்களும் மனம் மறுக்காமல் வருகை தந்தார்கள், நண்பர்கள் அனைவரும் இணைந்தோம் கருத்தைப் பகிர்ந்தோம். புத்தகத்தின் வாயிலாக அன்று தான் துவங்கப்பட்டது கைத்தடி மாத இதழ், அந்த நாளே ஏப்ரல் 02, பிறந்து என்ன தான் செய்தாய் என்று யாரும் கேட்கா வண்ணம் அமைந்தது அந்த நாள். அன்று என்னுடைய பிறந்தநாளாம் (22வது பிறந்தநாள்). பிறந்தது புது இதழ், பிறக்கட்டும் புதிய சமூகம் என்று துவங்கியது கைத்தடி பணி. அன்று துவங்கி இன்று வரை அதே வேகத்தோடு பயணிக்கிறது... அந்த பயணம் பல படிப்புகளை கற்றுக்கொடுத்தது “படிப்பறிவை விட பட்டறிவே” சிறந்தது என்னும் வரிகளை போல அந்த அனுபவங்களை, அதற்கான நன்றியை இந்த இதழில் பதிவு செய்யவே இவ்வளவு பெரிய பதிவு...

வணக்கம் தம்பி நான் உங்கள் முகநூல் நண்பன் நீண்ட காலமாக உங்களை முகநூலில் பார்த்து வருகிறேன். மகிழ்ச்சி தங்களின் முயற்சியைப் பார்த்து மகிழ்ந்து வருகிறேன். தொடர்ந்து பயணிப்போம் என்று சொல்லிவிட்டு வைத்துவிட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் அழைத்தார். “வணக்கம் தம்பி, நலமா? எப்படிச் செல்கிறது தங்கள் பணி” என்றார். நானும் எப்போதும் போல என்னுடைய உடல் மொழியில் பதில் கொடுத்தேன், சட்டென்று நீங்கள் ஏன் கருப்பு வெள்ளையில் இதழ் நடத்த வேண்டும் வண்ணத்தில் நடத்தினால் என்ன முயற்சி செய்வோம் என்றார். எனக்கும் அதுவே சரி என்று பட்டது அப்படியே ஆகட்டும் என்று நானும் அதற்கான முன்னெடுப்புகளை எடுத்தேன் வடிவமைப்பாளர் முதல் அச்சகத்தார் வரை புதியதாகத் தேட வேண்டி இருந்தது, பேருந்து பிடித்து நாடு விட்டு நாடு சென்று தேடவில்லை கைபேசியை எடுத்தேன் பெயர்களைத் தேடினேன் இரண்டு நண்பர்கள் எண் கிடைத்தது சற்றும் சிந்திக்கவில்லை எப்போதும் போல உண்மையை உணர்வோடு எனக்கான உடல் மொழியில் உரைத்தேன் நான் செய்யும் தொகையில் நட்டம் இல்லாமல் செய்கிறேன் என்று இருவரும் ஒருசேர உரைத்தார்கள் அவர்களின் வார்த்தைகள் மனதில் ஆழமாகப் பதிந்தது நம்மால் முடியும் என்று தமிழர் தலைவர் சொல்லிய “நம்மால் முடியாது யாராலும் முடியாது. யாராலும் முடியாதது நம்மால் மட்டுமே முடியும்” வரிகளைப் போல். நம்பிக்கையோடு கூடவே மனதில் உறுதி இருந்தது. “மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு” எதற்காகவும் தன்மானத்தை அடகுவைக்கக் கூடாது என்று... இப்படியாக முடிவு செய்து இதழை வண்ணத்தில் துவங்கினோம். “ஆயிரம் இதழ்கள் இருக்கும் போது இப்படி ஒரு இதழ் எதற்கு” என்றெல்லாம் பல பல கேள்விகள் எழுந்தன. “ஆயிரம் இதழ்கள் இருக்கும்போது இப்படி ஒரு இதழ் ஏன் இருக்கக் கூடாது” என்ற கேள்வியை மனதில் நிறுத்தி தொடர்ந்து பயணமாகி வருகிறோம். தொடர்ந்தும் பயணிப்போம் எங்களுக்காக அல்ல எம் மக்களை என் சகோதர சகோதரிகளை வேசி மகன் என்று




சொல்லும் மதத்தின் கருவை அறுத்து எறிய, தாழ்ந்து கிடக்கும் எம் சமூகத்தை உயர்த்த சமூக மாற்றத்தின் ஊன்றுகோல் கைத்தடியோடு பயணிப்போம்! தந்தை பெரியார் கொள்கையின் அடிப்படையில் பணி முடிப்போம்!

**ஏப்ரல்:** கருப்பு வெள்ளை தாளில் குறைந்த பக்கங்களோடு குறைந்த எண்ணிக்கையில் வேக வேகமாக இதழ் தயாரித்தோம் அனுபவம் துளியும் இல்லாத நிலையில், ரூ.12,500/- செலவு செய்து முதல் மாதத்தைக் கடந்தோம்...

**மே:** முதல் முறை வண்ணத்தில் இதழ் தயாரிக்க வேண்டும். மனதில் அச்சம் இல்லை மாறாக துணிவு இருந்தது. அறிவியல் வளர்ந்த இந்த சூழ்நிலை நம்மைச் சிறப்பாகச் செயல்பட வைக்கும் என்று அதே நேரம் அறிவியலை முறையாகப் பயன்படுத்தவில்லை என்றால் நம்மை வருந்த செய்துவிடும் என்று. முதல் முறை நேர்க்காணல் செய்யத் திட்டமிட்டோம் யாரை செய்வது எப்படி அதை பதிவு செய்வது என்ற பயம் ஒருபக்கம் நம்பிக்கையோடு அனுமதி கோரினோம் வழக்குரைஞர் அருள்மொழி அம்மா அவர்களிடம். அவர்களும் அனுமதி கொடுத்தார்கள். நேர்க்காணலை சிறப்பாக முடித்தோம். இதழை அச்சிட்டு கொடுத்தோம் வாசகர்களுக்கு. ரூ.19,850/- செலவில் புதியதாக சில நண்பர்கள் இதழை வாங்கத் துவங்கினார்கள்....

**சூன்:** வழக்குரைஞர் அருள்மொழி அம்மா அவர்களின் நேர்காணல் மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டது. தொடர்ந்தது நேர்காணல். புதியதாக பல தோழர்களின் கட்டுரைகளும் இடம்பெற்றது. பொறியாளர் பார்த்திபன்.ப அவர்களின் மார்க்சின் மூலதனம் ஒரு பொறியாளனின் இன்றைய பார்வையில் புதிய தொடராக இடம்பெற்றது. ரூ.19,850/- செலவில் இதழ் மக்கள் வாசிப்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**சூலை:** கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் எதிர்பாராத விதமாக இறந்த அந்த நேரத்தில் பழனி மதிவதனி அவர்கள் காலத்தை வென்ற கவிக்கோ என்ற தலைப்பில் கட்டுரையை இரங்கல் கட்டுரையாக புகழ் கட்டுரையாகப் பதிவு செய்ததும், வடிவமைப்பாளர் அட்டைப் படத்தை உயிர்ஓட்டமாக கொடுத்ததும் மக்களைக் கவர்ந்தது. 'தமிழர் விளையாட்டுகள்' என்ற புதிய தொடரும் இடம்பெறத் துவங்கியது, ரூ.19,850/- பண மதிப்பில் இதழ் அடுத்த கட்ட நகர்வுக்கு சென்றது...

**ஆகஸ்ட்:** மக்களைப் பெரிதும் பாதித்த இரண்டு என்று சொன்னால் அது நீட் மற்றும் GST என்று சொல்லலாம். அவை பற்றிய முழுமையான ஆய்வுக் கட்டுரைகளால் மக்களுக்கு தெளிவு பிறக்க வாய்ப்பாக அமைந்தது, அதே நேரத்தில் மாட்டுக்கறி அசிங்கம் அல்ல என்ற ஷாலின் அவர்களின் கட்டுரை மாட்டுக்கறி பற்றிய புரிதலை மக்களுக்கு கொடுத்தது. கூடுதல் எண்ணிக்கைகளில் புத்தகங்கள் அச்சிடப்பட்டு ரூ.24,100/- ரூபாய் மதிப்பில் புத்தகங்கள் வெளியிடப்பட்டது...

**செப்டம்பர்:** தந்தை பெரியார் அய்யா அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் சிறப்பிதழாக கூடுதல் பக்கங்களோடு, கூடுதல் எண்ணிக்கையில் பல வண்ணப் பக்கங்கள் இணைப்போடு தந்தை பெரியார் அய்யா பற்றிய சிறப்புக் கட்டுரைகள் ஓவியா அவர்களால் எழுதப்பட்டு மக்கள் வாசிப்பிற்கு ரூ.38,500/- செலவில் கொடுக்கப்பட்டது...

**அக்டோபர் :** நடப்புகள் நமக்கு சொல்வதென்ன? என்ற கேள்விகளோடு வே. மதிமாறன் அவர்களின் நேர்காணல் துவங்கியது. அரிய பல வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய அந்த நேர்காணல் பரவலாக பேசப்பட்டது. தொடர்ந்து மருத்துவம் சார்ந்த கட்டுரைகள் மருத்துவர் யாழினி அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. ரூ.24,100/- மதிப்பில் புத்தகங்கள் வெளிவந்தது...

**நவம்பர் :** நதிகளை மீட்போம் யாரிடமிருந்து, பத்திரிகையாளர் ப.திருமாவேலன் நேர்காணல், எச்சில் தொட்டி போன்ற பகுதிகள் இதழின் செரிவை கூடுதல் சிறப்புக்கு கொண்டு சென்றது. இப்படியாக எட்டு இதழைக் கடந்தது கைத்தடி. ரூ.24,100/- செலுத்தாத நிலை எல்லாம் ஏற்பட்டது...

**டிசம்பர்:** வணக்கத்திற்குரிய தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக 'வெறுப்புக்கு அஞ்சாத பெருநெருப்பு' என்ற அட்டைப் படத்தோடு ஆசிரியரின் ஓவியம் இடம்பெற்றது, அத்தோடுகூட 'மாட்டிறைச்சியும் மனிதக்கொலையும்' என்ற தொடர் கட்டுரை பல விளக்கங்களை கற்பித்தது. வாசகர்கள் அதிகரிக்க கூடுதல் இதழ்களை அச்சிட நேரிட்டது. கூடுதல் பணத்தையும் தயார் செய்ய நேரிட்டது. ரூ.24,100/- தயார் செய்து இதழை மக்களுக்கு கொடுப்பதில் பல்வேறு சிரமத்திற்கு உள்ளானோம் என்பது பெரிய செய்தி அல்ல, எப்போது கஷ்டம் இல்லாமல் கடந்தோம் என்று நினைக்கும் போது...

**சனவரி:** 'கேள்விகள் ஒருமுகம் பதில்கள் பல முகம்' என்று பலதுறைகளில் உள்ள ஆளுமைகளைச் சந்தித்து அவர்களிடம் ஒரே வகையான சமூகம் சார்ந்த கேள்விகளை வைத்து அவர்களின் பார்வையை மக்களுக்கு கொண்டு சேர்த்தோம். தமிழர் திருநாள் சிறப்பிதழாக பல வண்ணப் பக்க இணைப்புகளோடு ரூ.44,500/- மதிப்பில் ....


**பிப்ரவரி:** மனித மனத்தின் குறுகிய வெறித்தனம் ஆணவக்கொலை என்ற நேர்காணல் உடன் 'காதல் என்பது அதுவல்ல' என்ற கட்டுரையோடு காதலர் தின சிறப்பிதழ் வெளியீடு செய்யப்பட்டது, சுமார் ரூ.31,000/- மதிப்பில்.

**மார்ச்:** உலக வரலாற்றில் ஒரு நாத்திக அமைப்பிற்கு தலைவராகப் பொறுப்பு ஏற்ற முதல் பெண் அன்னை மணியம்மையார் என்ற அன்னை மணியம்மையார் பிறந்தநாள் சிறப்பிதழ், முதலாம் ஆண்டின் நிறைவு இதழாக மக்களைக் கவர்ந்தது. அதோடு எழுத்தாளர் சல்மா அவர்களின் நேர்காணல் இளைஞர்களுக்கு ஊக்கமாக அமைந்தது, ரூ.31,000/- என்ற மதிப்பில் இதழ் வெளிவந்தது...

இப்படியாக கடும் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பிற இடையூறுகளுக்கு இடையிலும் ஓராண்டைக் கடந்து இனிவரும் ஆண்டுகளிலும் தோழர்களின் மேலான ஆதரவோடு வெற்றிநடைபோடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஓராண்டு இதழில் பயணித்த அனைத்து எழுத்தாளர்களுக்கும், விளம்பரதாரர்களாகிய அனைவருக்கும் நன்றிகள் பல... சிலரின் பெயரை மட்டும் பதிவு செய்து இருக்கிறோம் என்று யாரும் தவறாக கருத வேண்டாம், அனைவரின் பெயரையும் பதிவிடவே விரும்புகிறேன் ஆனால் இடம் போதவில்லை, உங்களின் தொடர் ஆதரவு என்பது எனக்கும் இதழுக்கும் அவசியமே! சென்னையில் இதழை எங்கு இருந்து அனுப்புவது என்று சிந்தித்த போது என் இல்லத்தை பயன்படுத்திக்கோ என்று ஆதரவு கொடுத்த அன்பு தோழர் கா.தமிழரசன் அவர்களுக்கும் தற்போது என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருவராக இணைத்து தொடர்ந்து என்னோடும் இதழோடும் பயணித்து வரும் அருமைத் தோழர் பொறியாளர் வீரவேல் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள் பல... நான் நன்றிகள் பலருக்குச் சொல்ல வேண்டி உள்ளது அவர்களின் பெயர்கள் விடுபட்டு இருக்கிறது அதை நன்கு அறிவேன் கோபம் கொள்ள மாட்டீர்கள் என்ற நம்பிக்கையோடு அடுத்த ஆண்டின் இதழில் பயணிக்க விரும்புகிறேன். கைத்தடி களப்பணி குழு தோழர்களுக்கும், கைத்தடி வாசகர்களுக்கும் ஆதர்வாளர்களுக்கும் என்னுடைய நன்றிகள்!

சமூக மாற்றம் ஒன்றே நம் குறிக்கோள் வாருங்கள் பயணிப்போம்...! நன்றி...!

**கைத்தடியோடு... மு.சி.அறிவழகன்**



# சமற்கிருதத் திணிப்பும், சமஉரிமை பறிப்பும்

# தேவபாஷையின் தேவையென்ன?

2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 14,135 பேர் மட்டுமே தங்களின் தாய்மொழியென கூறிய சமற்கிருதமொழி நாட்டின் எல்லா மக்களிடமும் சென்று சேரவேண்டும் என்ற கொள்கை நோக்கம் ஒவ்வொரு காலகட்டத்திலும் பார்ப்பனியத்தினால் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வரும் கொள்கை திட்டம்தான் இது மொழியைக் கொண்டு சேர்ப்பதற்கான திட்டவரையறை மட்டுமே இல்லை. ஏனெனில் சமற்கிருத மொழி சாதாரண வழக்குமொழியாகவெல்லாம் பேசுவதற்கு உகந்த மொழியல்ல.

சமற்கிருத மொழியில் உச்சரிப்பு ஒலிகள் போன்ற அனைத்தும் சுலோகங்கள், வேத மந்திரங்கள் போன்றவைகளாகவே உள்ளன. வேதங்களும் வேத சுலோகங்களும் மனுநூல் போன்றவைகளும் மக்களை சென்று சேர்வது வெறுமனவே மொழியாக மட்டுமல்ல, வேதங்களிலும் மனுநூல்களிலும் சொல்லப்படுகின்ற பாகுபாடுகளை மக்களிடம் தீவிரமாக கொண்டு சேர்க்கின்ற முயற்சியே இப்போதைக்கு தேவபாஷை என்று அவாள் சொல்கின்ற சமற்கிருத திணிப்பின் பிரதான நோக்கம்.

17ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களின் ஆட்சியில் பீடத்தில் வைத்து சமற்கிருதம் போற்றப்பட்டதொரு நிகழ்வை மீண்டும் நிறுவ கடுமையாக முயன்று வருகிறார்கள். கிரேக்கத்தின் கிரீக்மொழியும் - ஜெர்மனியின் டொச்சு மொழியும், கோதிக்மொழியும் சமற்கிருத மொழியோடு எழுத்து, உச்சரிப்பு, ஒலிகளில் ஒத்திருக்கிறது. என்றும், அத்தகைய மொழி பல மொழிகளின் கூட்டுக்கலவையாகவே இருப்பதற்கான பல்வேறு சான்றுகளை மொழியியல் அறிஞர்கள் ஆய்வுகள் மூலமாக நிறுவியுள்ளனர். அப்படிப்பட்ட மொழியை நாடு முழுக்க கட்டாயமாகத் திணிக்க வேண்டுமென 1939இல் ஆர்.எஸ்.எஸ்-ன் பிதா மகனான கோல்வாக்கர் தாம் எழுதிய "நமது தேசத்தின் வரைவு" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இதே காலகட்டத்தில் 1938இல் சென்னை லயோலா கல்லூரியில் பேசிய அப்போதைய சென்னை மாகாண முதல்வர் ராஜாஜி, சமற்கிருதத்தை புகுத்தவே இந்தி இப்போதைக்கு புகுத்தப்படுவதாக நிகழ்ச்சி மேடையிலேயே வெளிப்படையாகவே சொன்னார். 1952ஆம் ஆண்டு இப்போதைய பா.ஜ.க.வின் தாய் அமைப்பான ஜனசங்கத்தின் மாநாட்டுத் தீர்மானமும் சமற்கிருதத்தை நாடு முழுக்க பரப்ப வேண்டும் என்ற உறுதியேற்றவுடனேயே கலைந்தது.

### கல்வித்துறையினூடாக திணிப்பு வேலை

**“சமற்கிருதம் பரவினால்தான் பார்ப்பனர்கள் வாழ முடியும், சுரண்ட முடியும், நம்மை கீழ்சாதி மக்களாக்க முடியும் அவர்கள் பார்ப்பனர்களாகவே இருக்கமுடியும் சமற்கிருத நலிவு பார்ப்பன ஆதிக்கத்தின் நலிவு அதை உணர்ந்து தான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையாக காரியம் ஆற்றுகின்றனர்”**

*2014ஆம் ஆண்டில் தமிழகத்தில் இயங்கிவரும் மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளிலும், CBSE பள்ளிகளிலும் ஆகஸ்ட் 7 முதல் 13 வரை சமற்கிருத வாரம் கொண்டாட வேண்டுமென அவசரமான உத்தரவை வழங்கி, சமற்கிருதத்தை மாணவர்களுக்கு கட்டாயமாகத் திணிக்க முற்பட்ட நிகழ்வைத் தொடர்ந்து குருஉத்சவ் என ஆசிரியர் தினத்தை சமற்கிருத பண்பாட்டின்படி தமிழகத்தின் உள்ள மாணவர்களை கொண்டாட வைத்ததும் பள்ளிகளை குறிவைத்த சமற்கிருதம் திணிக்கப்படுவதை வெளிக்காட்டியது. சமீபத்தில் சென்னை ஐஐடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பாக தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் பாடப்படாமல் மகாகணபதி எனத் தொடங்கும் சமற்கிருத பாடலைப் பாடியதோடு இந்த தவறுக்கு எவ்வித வருத்தமும் தெரிவிக்காத நிலையைப் பார்த்தால், இனி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படும் மரபுகளை தவிர்ப்பதற்கான முன்னோட்டம் என்பதையே இந்நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது.*

*2014ஆம் ஆண்டு சமற்கிருதத்தை மேம்படுத்த பல்கலைக்கழகங்களுக்கு 70 கோடியும் CBSE பள்ளிகளுக்கு 320 கோடியும் நிதி ஒதுக்கி கல்வி நிலையங்களுக்குள் சமஸ்கிருத திணிப்பை தீவிரப்படுத்தியுள்ளார்.*

*மாணவர்களிடத்தில், சமற்கிருதத்தில் அறிவியல் மருத்துவம், விஞ்ஞானம், போன்றவை பற்றிய பல்வேறு செய்திகள் இருப்பதாக பொய்யுரை பேசுகின்றனர். புஷ்பக விமானம் இன்றைய நவீன விமானத்தை விட உயர்வானது என அறிவியல் மாநாட்டில் பேசி குட்டுப்பட்டதும், இதுவரை நோபல் பரிசு பெற்ற எவருமே சமற்கிருதம் அறியாதவர்கள் தான் என்பதுமே சமற்கிருதத்தில் எவ்வித அறிவியலும் இல்லை என்பதற்கான சான்றாகும். எட்டாம் வகுப்பு தேர்விலேயே மாணவர்களின் திறன் அடிப்படையில் தொழிற்கல்வியை புகுத்தும் குலக்கல்வி முறையிலான திட்டமும், பெண்களுக்கு டி.டி.எச் வழியே வீட்டிலிருந்தபடியே கல்வி என்ற பெண்ணடிமை, கல்வி மறுப்பு, சமூகத்தில் பாலின பாகுபாட்டை தீவிரப்படுத்துதல் என, புதிய கல்விக் கொள்கையில் பல அம்சங்களும் வேத கால வர்ணப்பாகுபாடுகளையும் கல்வி மறுப்புகளையும் இம்மண்ணில் மீண்டும் நிறுவுவதற்கான முயற்சியாகவே இருக்கிறது. மருத்துவம் படிக்க சமற்கிருதம் அறிந்திருக்க வேண்டுமென்ற நிலையை 1930களிலேயே மாற்றிய நீதிக்கட்சியின் சாதனையை மாற்றி மீண்டும் சமற்கிருதத்தையே தகுதியாக அளவீடு செய்யவே கல்விநிலையங்கள் குறிவைக்கப்படுகிறது.*



**சமற்கிருதம் வேண்டாமென்பது ஏன்?**

1. **எம்மொழித் துணையுமின்றி தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட தமிழ்மொழியை நீச மொழி என்கிறது சமற்கிருதம்.**

2. **இந்திய மொழி அனைத்திற்கும் மூலமொழி சமற்கிருதமே என்ற பொய்யான ஆய்வு முடிவை சுமந்தபடி புகுத்தப்படுகிறது. இதனால் பிறமொழிகள் மீது ஆதிக்கத்தை நிறுவவே சமற்கிருதம் நுழைக்கப்படுகிறது.**

3. **தில்லை கோவிலின் சிற்றம்பலமேடை மீது தமிழ் ஏறத் தகுதியற்றது. என்று சொன்னவர்களின் தாய்மொழியான சமற்கிருதம் தமிழகத்திலே நுழைய தகுதியற்றது.**

4. **சமற்கிருத நூலான மனுநூல் மூலமாக இம்மக்களை வர்ணபாகுபாடு கொண்டு பிரித்த மொழியே சமற்கிருதம். நால்வருணங்களை சமூகம் தொடர்ந்து நினைவில் வைத்துக்கொள்ள ஏற்படுத்தும் நவீன ஏற்பாடு.**

5. **வழக்கொழிந்த மொழி வரிசையில் உள்ள மொழி, மிகவும் சொற்பமான மக்களே தாய்மொழியாகக் கொண்ட மொழி, பிற மொழிகளை விட உயர்வானது என்ற ஆதாரமற்ற பொய்களை சுமந்தபடி ஆட்சியதிகாரத்தின் துணையுடன் திணிப்பாக நுழைக்கப்படுவதை ஒரு போதும் சுயமரியாதை மண்ணில் அனுமதிக்க இயலாது.**

*இதனையெல்லாம் கருத்தில் கொண்ட பெரியார் “சமற்கிருதம் பரவினால்தான் பார்ப்பனர்கள் வாழ முடியும், சுரண்ட முடியும், நம்மை கீழ்சாதி மக்களாக்க முடியும் அவர்கள் பார்ப்பனர்களாகவே இருக்கமுடியும் சமற்கிருத நலிவு பார்ப்பன ஆதிக்கத்தின் நலிவு அதை உணர்ந்து தான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையாக காரியம் ஆற்றுகின்றனர்”*

*என 15.12.1960இல் வெளியான விடுதலையில் எழுதினார்.*

**“திணிப்பை உணர்வோம்!**
**தீரத்துடன் திணிப்பை முறியடிப்போம்!** •



# அரசு அலுவலகங்களும் ஆதிக்கச் சாதிகளும்

**ஆரியர், ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரணம், ஆரியம், ஆரியரிடம் மட்டுமல்லாமல், திராவிடச் சமூதாயத்தினரிடம் இன்னும் பெருமளவுக்கு இருப்பதனாலும் ஆரியத்திடம் அச்சப்படும் நிலையில் ஆளவந்தார்கள் இருப்பதினாலும் தான். எனவேதான் தம்பி, நமது கழகம், ஆரியரை ஒழித்திடும் வேலையை அல்ல, ஆரியத்தை ஒழித்திடும் வேலையில் ஈடுபடுகிறது.**

**– பேரறிஞர் அண்ணா**
**(திராவிட நாடு, 09–10–1955)**

அரசு அலுவலகங்களில் சாதி மற்றும் மதத்தின் பெயரால் செய்யப்படும் நுண்ணரசியல் வெளிப்படையானது. சேவை மனப்பான்மையுடனும், பொதுநல நோக்குடனும் இயங்க வேண்டிய அரசு அலுவலகங்கள் சாதிப் பஞ்சாயத்துகளினும் கேடாய் விளங்குகின்றன. ஒவ்வொரு அரசுத்துறையிலும், தலைமை தொடங்கி, கடைநிலை ஊழியர் வரை வியாபித்திருப்பது சாதி மட்டுமே.

அரசு அலுவலகங்களில் மதம் சார்ந்த விழாக்களைக் கொண்டாடுவதற்குத் தடையுள்ள போதிலும், மிகவும் விமரிசையாக வெளிப்படையாகவும் எவ்வித கூச்சமுமின்றி ஆயுத பூஜை, பிள்ளையார் பூஜை போன்ற பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. இதில் முக்கிய பங்காற்றுவது அலுவலகங்களிலுள்ள பார்ப்பன லாபியும், அதற்குத் துதிபாடும் அதிகார வர்க்கமும். இவ்வகை விழாக்கள் நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே வசூல்வேட்டை தொடங்கிவிடும். வசூலுக்கு ரசீது தரும் நடைமுறையும் சில அலுவலகங்களில் உண்டு. பூஜைக்குப் பணம் கொடுப்பவர்கள் ஆழ்வார், நாயன்மார்களைப் போல பெருமிதம் கொள்வதும், பணம் கொடாதவர்களை விரோதப் பார்வையால் வேடிக்கை செய்வதும் வேதனை தரும் விஷயங்கள். பலர் இத்தகைய ஒதுக்கப்படுதலுக்கு அஞ்சியே 'நமக்கேன் வம்பு" என்று தயக்கத்துடன் பணம் தருவதும் உண்டு. இதில் உச்சக்கட்ட காமெடி என்னவென்றால், அந்தந்த துறைத் தலைவர்களே இத்தகைய விழாக்களில் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பிப்பது.

அலுவலக வளாகங்கள் உள்ளே கோயிலும் அமைந்து விட்டால், கோயில்களில் பணிபுரியும் பூசாரிகள் செய்யும் ரகளைகள் தனிரகம். இடுப்பில் வேட்டியும், தோளில் ஒரு துண்டுமாய் அரைகுறை ஆடையோடு இவர்கள்

சுற்றிவருவது அரசு அலுவலகங்களின் தனித்துவமான காட்சி. அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியரைக் காட்டிலும், அதிகப்படியான வரவேற்புகளும் உபசரிப்புகளும் இவர்களுக்கு உண்டு. 'சாமி" என்றே பெரும்பாலும் இவர்கள் அழைக்கப்படுவர். நாளொரு சதுர்த்தியும் பொழுதொரு பூஜையுமாக வசூல் வேட்டை தவறாது நடப்பதுண்டு.

இவ்வாறு ஒரு பக்கம் பார்ப்பனீய ஆதிக்கம் நடைபெறுகிறதென்றால் மற்றொரு பக்கம் ஆதிக்கச் சாதியினர் ஒடுக்கப்பட்டவர்களின் மீது நடத்தும் உளவியல் வன்முறைகள்.

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உயர்ஜாதியினர் என்று கருதிக்கொள்வோர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மற்றவர்களின் சாதியை அறிந்துகொள்ளக் காட்டக்கூடிய ஆர்வம் வியப்பைத் தருவது புதியதாகப் பணியில் சேர்ந்த ஒருவரின் கல்வித்தகுதி, அனுபவம் ஆகியவற்றை அறிந்து கொள்வதைக் காட்டிலும், அவரது சாதிப் பின்புலத்தை அறிந்து கொள்வதில் தான் ஆர்வம் மிகுதியாக இருக்கும். பணியில் சேர்ந்தவரும் தம்மைப் போல ஒரு உயர்ஜாதியினர் சூத்திரர் என்று தெரிந்துகொண்டால், அதனால் அடையும் ஆனந்தமே அலாதி. அதிலும் அவர் தனது ஜாதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தால், அவருக்குப் பெண் பார்க்கும் படலமே தொடங்கிவிடும். அது மட்டுமின்றி, அங்கு பணிபுரியும் பட்டியல் இனத்தவர் யார் யாரென்று அவருக்கு அடையாளம்காட்டப்பட்டு, அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு இலவச அறிவுரைகளும் வழங்கப்படும்.

சாதியின் அடிப்படையில் சலுகைகள் தரப்படுவதும், விதிமுறைகள் தளர்த்தப்படுவதும் அரசு அலுவலகங்களில் வழக்கமான நடைமுறை. எடுத்துக்காட்டாக, ஒரு அலுவலகத்தில் தகுதிகாண் பருவம் (Probation) முடித்து, ஊதியத்தோடு விடுப்பு எடுப்பதற்கான தகுதியுள்ள ஒருவர் மருத்துவச் சான்றிதழோடு விடுப்பு எடுக்கும்போதிலும், அவர் பிற்படுத்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்தால், அவரது ஊதியம் நிறுத்தப்படுகிறது. அதே நேரம், தகுதிகாண் பருவத்தையே நிறைவு செய்யாது விடுப்பு எடுக்கும் ஒருவருக்கு 'தகுதியின் அடிப்படையில் இவருக்கு விடுப்பு அனுமதி வழங்கலாம்" என்ற வாசகத்தோடு விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. பூணூல் தான் அந்தத் தகுதி என்பதை சொல்லவும் வேண்டுமா?

பட்டியல் இனத்தவரைப் பாதுகாக்க சட்டங்கள் நடைமுறையில் உள்ளபோதும், குடும்ப சூழ்நிலை, எதிர்கால பணிச்சூழல், தனிமைப்படுத்தப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் போன்ற பல காரணங்களால் இத்தகைய நிகழ்வுகள் வெளிக்கொண்டுவரப்படுவதில்லை. அட்ஜஸ்ட் செய்துகொண்டு பணிபுரிவதே யதார்த்தமாகிப் போகிறது.

மொத்தத்தில், இந்தியாவில் சமயச்சார்பற்ற தன்மை இருக்கிறதோ இல்லையோ, அரசு அலுவலகங்களில் சாதிச் சார்புள்ள தன்மைதான் இருக்கிறது என்பதே நடைமுறை உண்மை. ●

பேரா. பழ.வெங்கடாசலம்
மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



## டம்ளரில் பால் குழக்க குழக்க வந்து கொண்டே இருக்கும்!

### தேவையானப் பொருட்கள்

இரண்டு கண்ணாடி டம்ளர்கள், கொஞ்சம் பால்.

### மேஜிக் செய்யும் முறை

பார்வையாளர்கள் மத்தியில் மேஜிக் செய்யும் போது வழக்கமாக கடைப்பிடிக்க வேண்டிய இடைவிடா பேச்சு அவர்கள் கவனத்தை, ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்க வேண்டும். பால் உள்ள டம்ளரைக் காண்பித்து "இதோ டம்ளரில் பால் இருக்கிறது. மந்திரத்தால் குடிக்க குடிக்க வற்றாமல் பால் வந்து கொண்டே இருக்கும்." என சொல்லிவிட்டு டம்ளர் பாலை சிறிது குடிப்பது போல் வாயில் வைத்து பால் படும்படி செய்ய வேண்டும்.

பிறகு மந்திரம் போடுவது போல் முணுமுணுத்து ஒரு துணியால் பால் டம்ளரை மூடி விட்டு மந்திரக்கோலால் சுற்றிக் காண்பித்து துணியை எடுத்து விடவேண்டும். இப்போது பால் பழையபடி டம்ளரில் நிறைய இருக்கும். இதை மீண்டும் மீண்டும் செய்ய பால் வந்து கொண்டே இருக்கும்.

இது காண்போர் மனதை மிகவும் கவர்ந்து விடும் . அவ்வப்போது பால் விலை மாட்டின் வகைகள் போன்ற நடைமுறைச் செய்திகளை விளக்கலாம்.

### மேஜிக் இரகசியம்

ஒரு கண்ணாடி டம்ளரில் சிறிது பால் ஊற்றி அதற்குள் செல்லும் படியான மற்றொரு சிறிய கண்ணாடி டம்ளரை உள்ளே போட்டு விட வேண்டும். இப்போது பால் நிறைய உள்ள அளவு சரி செய்து கொள்ள வேண்டும். டம்ளரை இரண்டு விரல்களில் பிடித்து உள்ளே உள்ள டம்ளரை சிறிது மேலே தூக்க பால் குறைந்து போய் இருக்கும். இதை குடித்து விட்டதாக சொல்லி துணியை மூடிவிட்டு உள்ளே உள்ள டம்ளரை விட்டதும் பால் டம்ளர் நிறைய மீண்டும் இருக்கும்.

இதை நாம் தனியே செய்து நன்கு பழகிக் கொள்ள வேண்டுவது அவசியம். ●




# சிரியாவில் இன்று நடப்பதென்ன?

பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள், அண்டை வீட்டாரைத் தொல்லை செய்யாதீர்கள், அந்நியப் பெண்களை ஏறெடுத்துப் பார்க்காதீர்கள், அநாதையின் தலையை இரக்கத்துடன் தடவுங்கள், நோயாளிகளை நலம் விசாரியுங்கள், ஏழை எளியவர்களுக்கு உணவளியுங்கள் என்பதைப் போன்ற நற்போதனைகளை மட்டுமே மக்களுக்கு வழங்கிய முகம்மது நபியைப் பின் தொடர்பவர்களா இவர்கள்? யார் இவர்கள்? நபிகள் சொன்னவைகளை தொடர்பவர்களாக, வாழ்க்கையில் தினமும் இதை கடைப்பிடிப்பவர்களாக இருந்தால் மனிதநேயம், மானிடப்பற்று அல்லவா இவர்களிடம் இருக்க வேண்டும். இவர்களின் பற்று இவர்களை மதம் பற்றிக்கொண்டது விளைவு மனிதம் மாண்டது, மாண்டுக் கொண்டிருக்கிறது.

அதிகார (பசி) போதை, வெறி தலைக்கேறியதால், கொலைகாரர்களாய் மனிதர்களை, குறிப்பாக குழந்தைகளையும் கொத்துக்கொத்தாக கொன்று குவித்தபோதும், குருதி வழிந்தோடும் முகத்தோடு குவியல் குவியலாக அடுக்கி வைக்கப்பட்ட பிணங்களில் குழந்தைகளின் முகத்தைக் கண்டபோது பார்ப்போரின் நெஞ்சம் பதறுகிறதே, இந்த உணர்வு அதிகார (பசி) போதை வெறி கொண்ட இவர்களின் உள்ளத்தில் இல்லாமல் போனதேன்? இல்லை, இதுபோன்ற செயல்களெல்லாம் நாட்டை ஆள்வதற்கு, அல்லது ஆள்பவர்களின் தகுதி, கடமைகளில் ஒன்று என எண்ணிவிட்டார்களா?

நாட்டை ஆள்பவர்கள், அந்த நாட்டில் வாழும் மக்கள் வளமுடன், நலமுடன் வாழ வழி செய்வார்கள் செய்யவேண்டும் என்பதற்குப் பதிலாக, அந்த நாட்டின், நாட்டு மக்களுக்கு சொந்தமான வளத்தை பறிப்பதோடு மட்டுமல்லாமல், அப்பாவி மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது நாம் வாழும் இந்திய தேசத்திற்கும் பொருந்தும். வல்லரசாகக் கனவு காணும் நாடுகளும் சரி, வல்லரசான நாடுகளும் சரி, நல்லரசாக இருப்பதைப்பற்றி, இருக்க வேண்டுமேன்பதைப்பற்றி கனவு கண்டதாகவோ, காண்பதாகவோ தெரியவில்லை. அது அவசியமில்லைபோலும்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாகத் திரிவது அவலமான நிலையென்றால் அந்த அவலமான நிலையில் இருக்கக்கூட அனுமதிக்காமல், சொந்த நாட்டு மக்களை குண்டு போட்டு கொன்றுக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள் இது பேரவலம். இதற்குக்காரணம் அந்நாட்டு அரசே என்பது தான் சிரியாவின் பெரும் சோகம். கடந்த சில நாட்களாக சமூக வலைத்தளம் எனும் கருத்து வணிகச் சந்தையில் அதிகம் விவாதப் பொருளாக இருந்து வருவது சிரிய உள்நாட்டுப் போர் குறித்து தான். ஆனால், இந்தப் போர் இன்றோ, நேற்றோ ஆரம்பிக்கப்பட்டது அல்ல! கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியாளர்களுக்கு எதிராக நடைபெறும் இந்த உள்நாட்டுப் போர் தற்போது தீவிரமடைந்து, வயது முதிர்ந்த வயோதிகர்கள் தொடங்கி, கருவில் உள்ள சிசு வரை கொடூர மரணத்தைத் தழுவி வருகிறார்கள். போரினால் பாதிப்பிற்குள்ளாகி காயமுற்று, இறந்த குழந்தைகளின் புகைப்படங்களை முழுமையாகக் காண, கொடிய இரு இதயங்கள் வேண்டும்.

இப்போருக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும், அடிநாதம் என்னவோ சன்னி - ஷியா எனும் இசுலாத்தில் இருக்கும் உட்பிரிவு பிரச்சனைதான்.

ஆயிரமாண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உட்பிரிவு, இன்று சிரியாவில் உள் நாட்டுப்போராக வெடித்துள்ளது. சரி, தற்போது சிரியாவில் சன்னி - ஷியா முஸ்லிம்களுக்கிடையே நடக்கும் பிரச்சனை என்ன ?

உள்நாட்டு போருக்குப் பின்னர் ஜெர்மனி, அமெரிக்கா, பிரிட்டன், வளைகுடா நாடுகள், பெல்ஜியம், கனடா, ஸ்பெயின் இப்படிப் பல நாடுகள் சிரியாவுடனான தூதரக உறவைத் துண்டித்துக் கொண்டன. இரான், ரஷ்யா, சீனா சிரிய அரசின் நண்பர்களாக உள்ளனர். பஷார் ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்யா சிரியாவின் உள் நாட்டுப் போரில் தலையிடுகிறது என்றால், அமெரிக்கா இதுதான் சாக்கு என்று வழக்கம் போல ஐ.எஸ். இயக்கத்தை அழிக்கிறோம் பேர்வழி என்று சிரிய கிளர்ச்சிப் படைக்கு ஆதரவு அளித்து வருகிறது. துபாய் மற்றும் வளைகுடா நாடுகள் போராளி குழுக்களுக்கு உதவியாக இருந்து வருகின்றது.

இந்தப் போரில் இதுவரை கிட்டத்தட்ட 5 லட்சம் பேர் மரணம் அடைந்து இருக்கிறார்கள். ஆனால் இன்னும் பலரின் மரணம் குறித்த முறையான அறிவிப்பு வெளியாகவில்லை. இது 5 லட்சத்தை தாண்டும் என்று ஐ.நாஅமைப்பு கூறியுள்ளது. சிரியாவின் உள்நாட்டுப் போருக்கு ஐ.நா தனது தூதுவர்களை அனுப்பி முடிந்தளவு சமரசம் செய்ய முயற்சித்தது. இதற்கு சிரிய அரசு சற்றும் செவி சாய்க்கவில்லை.

மனிதாபிமானமற்ற தாக்குதலால் தெருக்களில் ஆங்காங்கே கேட்பாரற்ற நிலையில் பிணங்கள் கிடக்கின்றன. போரில் தன் தந்தையையும், தாயையும் இழந்து அநாதைகளாக நடுத்தெருவில் நிற்கின்றனர். குடும்பத்தையும், நண்பர்களையும் இழந்த மக்கள் ரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.

தரைவழித் தாக்குதலை சமாளித்து உயிரைக் காத்து ஓடுவதற்குள், வான்வழித் தாக்குதல் நடத்துகிறார்கள். உயிர்பிச்சை கேட்கக் கூட அவகாசம் கொடுக்காமல் கொடூரமாக கொல்லப்படும் ஒரு கொலை வரலாறு சமகாலத்தில் அன்று ஈழம், இன்று சிரியாவாக உள்ளது. அதிகார போதை ஒரு நாட்டையே சவக்குழியாக்கிக் கொண்டிருக்கின்றது.

## மனிதமற்ற உலகில் மதங்கள் இருந்து என்ன பயன்?

மதவெறி மற்றும் அதிகார வெறி பிடித்தவர்களுக்கு எப்பொழுதும் போர்களைப் பற்றியோ, பசியைப் பற்றியோ, உழைப்புச் சுரண்டலைப் பற்றியோ கவலை இருப்பதில்லை. அவர்களுக்கு தாங்கள் நினைத்தது நடக்க வேண்டும்.





கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் கடைசியாக மிச்சம் இருக்கும் கிழக்கு கூட்டா பகுதி மீது சிரிய ராணுவமும், ரஷ்யப் படைகளும் கூட்டாக இணைந்து ஐ.நா. சபை அறிவித்த 30 நாட்கள் தற்காலிக போர்நிறுத்தத்தை மீறி தாக்குதல் நடத்தி கொத்துக்கொத்தாய் மக்களை கொன்று குவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். மக்கள் ஒரு பக்கம் தங்களை மனிதக் கேடயங்களாய் பிடித்து வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்களிடமும், அவர்களை அழித்து சிரியாவை சன்னி தீவிரவாதிகளின் பிடியில் மீட்க நினைக்கும் சிரிய அரசுக்கும் இடையில் மாட்டிக்கொண்டு மடிந்து கொண்டு இருக்கின்றார்கள். ஒடுக்கப்பட்ட அலாவி பிரிவு முஸ்லிம்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுப்பதை விரும்பாத சன்னி மேலாதிக்கவாதிகள் ஒட்டுமொத்த சிரியாவையும் கைப்பற்றி தங்களின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த, அமெரிக்கா ஏகாதிபத்தியம், சவுதியின் துணையுடன் சிரிய அரசுப் படைகளுக்கு எதிராகப் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

உலகில் உள்ள எல்லா மதங்களும் ஆளும்வர்க்கத்தின் கைக்கூலியாகவே செயல்படுகின்றன. மதவாதிகளுக்கு தன் சொந்த மதத்தைப் பின்பற்றும் மக்கள் பட்டினியால் சாவதைப் பற்றியோ அவர்கள் வறுமையால் அழிவதைப் பற்றியோ எந்தக் கவலையும் கிடையாது. தன் சொந்த மத மக்கள் தன்னுடைய பெயரால் அடித்துக்கொண்டு சாவதைப் பற்றி கடவுள்களுக்கும் கவலை கிடையாது. மத வெறியர்களின் பயங்கரவாத செயல்களை எதிர்க்கத் திராணியின்றி கோழைகளாய், அடிமைகளாய் மத விசுவாசிகள் இருக்கின்றார்கள்.

மனிதம் இல்லாத எல்லாத மதங்களும் இந்த உலகில் இருந்து அழித்தொழிக்கப்பட வேண்டும். சிரியாவிலோ, இல்லை உலகில் வேறு நாடுகளிலோ மதத்தின் பெயராலும், கடவுள்களின் பெயராலும் தினம் தினம் கொல்லப்படும் நூற்றுக்கணக்கான மக்களின் உயிர்களுக்கு இந்த மதவாதிகள் ஒருநாள் பதில் சொல்லியே ஆகவேண்டும். மனித உயிர்களை இரக்கமற்று கொன்றுபோடும் கொடியவர்களை மதமும், கடவுளும் வேண்டுமென்றால் இந்த உலகில் தொடர்ந்து ஆளும் வர்க்கத்தின் கைக்கூலிகளாய், எடுபிடிகளாய் இருக்க அனுமதிக்கும். இந்தச் சமூகம் அறிவுபெற்று முற்போக்கான சிந்தனையின் வழி மாறும்போது மதத்தையும், கடவுளையும் வைத்து பிழைப்பு நடத்தும் பிற்போக்கு கும்பல் தங்களது இடத்தை காலி செய்துகொண்டு ஓடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அந்த நாளுக்காக மனிதத்தை மதிப்பவர்கள், நேசிப்பவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். வஞ்சிக்கப்பட்ட, அடிமைப்பட்ட, உழைக்கும் மக்களே அனைவரும் ஒன்று கூடுங்கள், சமதர்ம சமுதாயம் படைக்க. ஒன்று படுவோம், வெற்றி பெறுவோம், புரட்சி ஓங்குக. ●

லெனின், காமராசு இருவரும் பத்தாம் வகுப்பு மாணவர்களாக இருந்தாலும் அந்த ஊர் மக்களால் மிகப்பெரிய மனிதர்களாக மதிக்கப்பட்டனர்.

காரணம் அந்த ஊருக்கு பெரியார், அம்பேத்கர், காரல் மாக்ஸ் போன்ற புரட்சியாளர்களை ஆசிரியர் இராவணப்பெரியார் மூலமாக ஊருக்கு அறிமுகம் செய்தவர்கள் ஆகையால் அவ்வூரில் மிகுந்த மரியாதைக்குரிய நபர்களாக பார்க்கப்பட்டனர்.

தோழர் இராவணப்பெரியார் ஆசிரியர் பணியினை வெகு சிறப்பாகவே செய்து வந்தார். கிட்டத்தட்ட அந்த பள்ளியில் படிக்கும் மாணவர்கள் குடும்பத்தின் ஒரு அங்கமாகவே மாறிப்போனார்.

ஒரு முறை ஆசிரியர் இராவணப்பெரியார் ஞாயிறு விடுப்பு நாளில் லெனின், காமராசுவின் கிராமத்தில் மாலைநேர பயிற்சி வகுப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். பயிற்சி வகுப்பு முடிந்து காமராசுவின் வீட்டில் அமர்ந்து உணவு அருந்திக்கொண்டு இருந்தார்.

“ஏன் தோழர் உங்களுக்கு கல்யாணம் ஆகிடுச்சா?” என ஆசிரியர் இராவணப்பெரியாரை கேட்டார் ஒரு பெரியவர்.

“இல்லை தோழர்” என்றபடி சாப்பிட்டு முடித்து கையைக் கழுவினார்.

அவரை ஆச்சரியத்துடன் பார்த்தார் தோழர். “ஏன் தோழர் இன்னும் கல்யாணம் பண்ணிக்கல” என்றார்.

“இல்லை தோழர் எனக்கு அதில் உடன்பாடு இல்லை அதனால் செய்துக்கல”

“அதான் ஏன் தோழர் என்ன காரணம் நீங்க நிறைய சாதி மறுப்பு மத மறுப்புத் திருமணங்கள் செய்து வைக்கறீங்களே ஆனா நீங்க...?” என்று இழுத்தார்.

“இல்லை தோழர் நான் சாதி மறுப்பு மத மறுப்புத் திருமணங்கள் செய்து வைப்பது சாதி மத கட்டமைப்புக்கு எதிராக சமத்துவம் வரவேண்டும் என்பதற்காக. ஆனால் எனக்கு அதில் உடன்பாடில்லை. இந்திய சமூகச்சூழல் என்பது கணவன் மனைவி எனும் ஒரு கட்டமைப்பை வைத்துள்ளது. முற்போக்கு பேசுவோர் கூட திருமண கட்டமைப்பு என்று அடங்கிப்போய் விட்டால் கணவன் மனைவி எனும் பொதுப்புத்தியில் சிக்கி விடுகிறார்கள். அந்த பெண் தாயாக வேண்டிய கட்டாயம் உருவாகிவிடுகிறது.

பிறகு அவள் கற்ற கல்வி என்பது இச்சமூகத்திற்கு பலன் அளிக்காமல் போய் விடுகிறது. பெண் வெறும் பிள்ளை பெறும் எந்திரமாகி கணவன் குழந்தைகள் உற்றார் உறவினர் என்று அவள் ஒரு சிறைக்கைதியாகவே வாழவேண்டியதாய் உள்ளது.

பிள்ளை பெறாமல் என்னோடு வாழ அவளது தேவைகளை அவளே பூர்த்தி செய்து கொள்ள அன்றாடம் அவரவர் உழைத்து அவரவர் சாப்பிட்டு கொள்ள வேண்டும். யாரும் யாருடைய கையை நம்பி இங்கு வாழக்கூடாது. முக்கியமாய் அவரவர் தேவைகளை அவரவர்களே பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். பிடித்தால் வாழலாம் இல்லாவிட்டால் தனக்கான இணையை தானே தேர்வு செய்து கொண்டு வாழலாம்.

இந்த சட்டதிட்டங்களுக்கு இதுவரை யாரும் ஒப்புதல் அளிக்கவில்லை. அதனால் நான் இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லை.

இந்தக் கருத்தியலுக்கு யார் ஒப்புதல் அளிக்கிறார்களோ அவரைத் திருமணம் செய்து கொள்வேன். அதுவரை திருமணம் எனும் பேச்சுக்கே இடமில்லை. அப்படியே திருமணம் செய்தாலும் என்னுடைய பெரியாரியல் பணி செய்ய தடைவிதிக்காமல் இருக்க வேண்டும் என்பது எனது விருப்பம்.”

“சரிதான் வாத்யாரே அதுக்குனு கல்யாணமே பண்ணாம வாழணும்ங்கறது சரியில்லையே!?”

“மனுசனுக்கு கல்யாணம் அவசியம் இல்லைங்களா?”

“இல்லை தோழர் இங்க எல்லாருமே கல்யாணம் பண்ணிகிட்டா ஒரு வட்டத்துக்குள்ள அடங்கிப்போகவேண்டிய நிர்ப்பந்தம் வந்துடுது இல்லையா. எனக்கு அந்த கட்டுப்பாடுகளில் உடன்பாடில்ல. நான் நானாகவே வாழணும். சமூகத்தில் நல்ல தரமான மாணவர்களை உருவாக்கணும்.



குறிப்பாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களை கல்வியில் நலவழிப்படுத்தணும். அவங்க எல்லாம் அரசுப்பணியாளர்களா அதிகார தோரணையில் அமரணும்.

எந்த சாதி தன்னை உயர்சாதின்னு சொல்லி ஒரு சமூகத்தை ஒடுக்கியதோ அந்த சமூகத்தின் முன் அவர்கள் ஐஏஎஸ் ஐபிஎஸ் தாசில்தார் மருத்துவர் இஞ்சினியரா வரணும். இங்கே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று சாதிப்பெருமை பேசி திரிந்தவனெல்லாம் தாழ்த்தப்பட்ட எனது சகோதரன் ஒரு அதிகாரியா வந்து நிக்கும்போது வேற வழியே இல்லாம கையெடுத்து கும்பிடணும் ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு கிடந்த இந்த சமூகம் நெஞ்சு நிமிர்த்தி இந்த சமூகத்தில் நடக்கணும்.

செருப்பணிந்து நடக்க முடியாதவனின் பிள்ளைகள் பூட்ஸ் காலோடு வலம் வரணும் தோளில் துண்டணிய முடியாத நல்ல உடை உடுத்த முடியாதவனின் பிள்ளைகள் கோட் சூட் அணிந்து வரணும். தெருவில் நடக்க உரிமை இல்லாதவனின் பிள்ளைகள் அரசாங்க வண்டியில் போலீஸ் பாதுகாப்போடு வரணும். சாதி வெறி பிடித்து அலைந்த சாதி சாக்கடைகள் காலம் காலமாய் தான் செய்த குற்றங்களை அறியாமைகளை திருத்திகொண்டு சமத்துவத்தை ஏற்றுக்கொள்வதை தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு வரணும். அது வரைக்கும் உழைப்பேன் எனது ஆசிரியர் பணியை சிறப்பாக செய்து கொண்டே இருப்பேன் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் வழியில் அவரது கொள்கையில்."

"அப்போ ஊருக்காக உழைக்கணும்னு சொல்றீங்க அடுத்தவங்க நல்லா இருக்கணும்ங்கறதுக்காக உங்க இளமைய உங்க வாழ்க்கைய தொலைக்கறீங்க அப்படித்தானே வாத்யாரே!?"

"அப்படிலாம் நெனைக்கதேவையில்லைங்க. தந்தை பெரியாருக்கு கோடிக்கணக்கான சொத்து இருந்துச்சு. அதுல அவரு சொகுசு வாழ்க்கை வாழணும்னு ஒருக்காலமும் நெனைக்கலயே எத்தனையோ பதவிகள் அவரை தேடி வந்துச்சு. எத்தனை பதவிகள்ல இருந்தவரு அய்யா பெரியார் ஆனா சாகற வரைக்கும் அவர் இந்த மக்களுக்காக தானே மூத்திரச்சட்டியோட.

ஊரெங்கும் உலகெங்கும் தெருவெங்கும் இந்த மக்கள் மானமும் அறிவும் பெற்று சுயமரியாதையோட வாழணும்னு இறுதி மூச்சுவரை போராடுனார்.

அவருக்கு இருந்த சொத்து மதிப்புக்கு வித விதமா துணி உடுத்தியிருக்கலாம்ல. கால்மேல கால் போட்டு உக்காந்து சாப்பிட்டு இருக்கவேண்டிய செல்வந்தர் அவர் மட்டுமல்ல அவர் மனைவி, தங்கை உட்பட அத்தனைபேரையும் இந்த மக்களுக்காக போராட்ட களத்தில் இறக்கிய ஒரு தலைவர் பெரியார். அன்றைய பார்ப்பன கொடுமையை சகித்துக் கொள்ள முடியாமத்தானே இந்த மக்களுக்காக உழைத்தார். அவர் உழைத்த உழைப்புதானே இன்றைக்கு நீங்க நானெல்லாம் நெஞ்சு நிமிர்த்தி நடக்க முடியுது.

சூத்திர சாதியென பார்ப்பான் முன்னாடி கை கட்டி நின்ற என் பரம்பரையில் நான்தானே முதல் பட்டதாரி ஆக முடிஞ்சது இன்னைக்கு வாத்தியார் வேலைக்கு வந்து கை நெறய சம்பளம் வாங்கறனே. அந்த பெரியார் உழைத்த உழைப்பின் நன்றிக்கடனாகத்தான் நான் எனது ஆசா பாசங்களை உணர்ச்சிகளை புறந்தள்ளிவிட்டு இந்த சமூகத்திற்காக உழைக்கணும்னு தோணுது.



மற்றபடி எனக்கும் உங்களைப் போலவே அன்பு, காதல், காமம், பாசம், இயற்கை ரசனை என பல உணர்வுகள் நிறையவே இருக்கு. உண்மையை சொல்லனும்னா இந்த இயற்கையை இந்த மக்களை நேசிக்கும் ஒருத்தரால்தான் சமூகப்போராளியாய் இருக்க முடியும். எனக்கும் சரியான நேரம் கனிந்தால் நானும் உங்களை போல வாழவே விரும்புவேன்.

சரி தோழர்களே ரொம்ப நேரமாச்சு நாளை பள்ளிக்கூடத்துக்கு போகணும் வேலை இருக்கு." என்றபடி கிளம்பினார் ஆசிரியர் இராவணப்பெரியார்.

பழைய நினைவுகளில் கொஞ்சம் கண்ணயர்ந்து உறங்கிப்போயிருந்தார் லெனின். காமராசு தோழர் அவரை பிடித்து உலுக்கினார் "தோழர் எழுந்திரிங்க தோழர் எழுந்திரிங்க. சி பிளாக் பக்கம் ஏதோ பிரச்சனை ஒரே அடிதடியா இருக்கு வாங்க" என்று எழுந்து வெளியே வந்தார். கூடவே லெனினும் முகத்தை கழுவிக்கொண்டு விரைந்து வந்தார்.

கைதிகள் மத்தியில் ஒரே சலசலப்பு. கூச்சல் கலவரம் கூட்டத்தை விலக்கிகொண்டு உள்ளே நுழைந்தனர் காமராசுவும் லெனின் தோழரும். அங்கே அமாவாசை சேலத்துக்காரன் ஒருவனை போட்டு அடித்துகொண்டிருந்தான்.

முகமெல்லாம் அடிபட்டு வீங்கியிருந்தது சேலத்துக்காரனுக்கு. சண்டையை விலக்கிவிட்டு "என்னாச்சு பா அமாவாசை என்னாச்சு ஏன் இப்படி அடிச்சிக்கறீங்க." என்று இழுத்தார் அமாவாசையை. "சார் விடுங்க சார் இவனை சும்மா விடக்கூடாது சார்" என்று சீறினான் அமாவாசை.

"என்னதான் பிரச்சனை சொல்லுங்கப்பா" என ஆளுக்கு ஒரு அறைவிட்டார் லெனின்.

"டேய் வெளிய போறதுக்குள்ள உன்னை போட்டுட்டு தான்டா போவேன். நான் வீரப்படையாட்சிடா" என மீசையை நீவிக்காட்டினான்

"போடா பொறம்போக்கு நா உன்ன மாதிரி சாதி வெறி பிடிச்சு அலைறவன் கெடையாதுடா மனுசன மனுசனா மதிக்கறவன் போடா முடிஞ்சா போட்டு பாருடா"

"யோ லெனினு அவங்கிட்ட சொல்லி வையி த்தா நீ ஏதோ சப்போட் பண்றியாமே. அந்த தைரியத்துல தான் எச்ச நாயி என்மேல கைய வைக்கிறான். ஊர்ல எங்கள கண்டாக்க கக்கத்துல துண்டெடுத்து வைச்சிகிட்டு போற நாய்ங்க எல்லாம் எங்கிட்ட எகத்தாளம் பேசுதுங்க. உங்களையெல்லாம் வைக்க வேண்டிய எடத்துல வைக்கணும்டா."

"டேய் போடா உன் சாதி பெருமை மசுர நீயே வைச்சுக்க. சரி நீ பெரிய சாதி பெரிய சாதினு பேசறியே நீ என்னா கேசுல உள்ள வந்திருக்க எச்சப்பயலே கஞ்சா வித்த கேசுல உள்ள வந்துருக்க. நான் மட்டுமல்ல என் பசங்க எல்லாரும் அடக்கு முறைக்கு எதிராக நின்னு போராடி ஒன்ன மாதிரி ஒரு சாதி வெறி புடிச்சவனோட சங்கறுத்துபுட்டுதான்டா ஜெயிலுக்கே வந்திருக்கோம். செய்யறது எச்சத்தனமான வேலை. இதுல சாதிப்பெருமை மசுறு உனக்கு போடா"

வார்டன்கள் பதறி அடித்துக்கொண்டு ஓடிவந்தனர். லத்தியை விளாசியபடி லெனினைக் கண்டதும் தயங்கியபடியே ஏய் என்னப்பா பிரச்சனை கௌம்பு கௌம்பு என விரட்டினர்.

**- தொடரும்**

சுப. வீரபாண்டியன்

# பெண்கள் மறக்கலாமா பெரியாரை?



பழந்தமிழ் மன்னன் பூதப்பாண்டியன் இறந்துபட, அவன் மனைவியும் அரசியுமான பெருங்கோப்பெண்டு தீப்பாய முயல்கிறாள். சான்றோர்கள் அவளைத் தடுத்து நிறுத்த முயல்கின்றனர். அப்போது அந்த அரசி, உடன்கட்டை ஏறாமல் என்னைத் தடுப்பதன் மூலம், கைம்மைத் துன்பத்திற்கு என்னை ஆளாக்குகின்றீர்களா? என்று வினவுகிறாள்.

"துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்

அன்பனை இழந்தேன்யான் அல்லல் கொண்டழிவவோ"

என்று அன்று அந்த அரசி கேட்டதைத்தான் பெரியார் இன்று நம் காலத்தில் கேட்டுள்ளார். தீயில் விழுந்து இறந்து போவதை விடக் கைம்மை நோன்பு கொடியது என்றால், பெண்களுக்குக் காலம் காலமாக இழைக்கப்பட்டு வரும் கொடுமையை என்னென்பது!

கைம்மை நோன்பு பற்றி மட்டுமல்லாது, காதல், கற்பு, குழந்தை பெறுதல் உள்ளிட்ட எல்லா நிலைகளிலும், பெண்களின் பக்கம் நின்றே பெரியார் சிந்தித்துள்ளார். 'தீண்டாமை இழிவு நீங்க இஸ்லாமே இன்மருந்து என்று சொன்ன பெரியார், அந்த மதத்தில் உள்ள பர்தா, கோஷா போன்ற முறைகளை முற்றிலுமாக மறுத்துள்ளார். ஆண் - பெண் என்னும் இரு பிறப்பிற்கும் பொதுவான, சுயேட்சையான கற்பு முறை வேண்டும் என்கிறார்.

திருமணத்துக்குப் பிறகும் கூட ஒரு பெண்ணுக்கு காதல் வரலாம் என்று சொல்லும் பெரியார், கற்புக்காகப் புருஷனின் மிருகச் செயலை எல்லாம் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை என்று சமூகத்தின் பொதுப்புத்திக்கு எதிரான கருத்தை முன்மொழிகிறார். "கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக் கொண்டு, காதலும், அன்பும் இல்லாதவனோடு இருக்க வேண்டும் என்ற சமூகக் கொடுமையும் ஒழிய வேண்டும்" என்று தனக்குச் சரியென்று பட்ட நியாயத்தை எவருக்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கின்றார்.



இன்னும் ஒரு படி மேலே போய், பெருந்துறை அருகில் ஒரு கிராமத்தில் *26.01.1931* அன்று பேசும்போது, "ஆண் இரண்டு வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டால், பெண் மூன்று ஆசை நாயகர்களை வைத்துக்கொள்ள முற்பட வேண்டும்" என்று மிகத் துணிச்சலாகக் கூறுகின்றார். அப்போதே இக்கூற்றுக்கு எதிர்ப்பு எழுந்தது. பெரியார் ஒழுக்கக் கேட்டிற்கு வழி வகுக்கிறார் என்றார்கள். அதற்கெல்லாம் பெரியார் அசைந்து கொடுக்கவில்லை. அப்படி ஒழுக்கம் பற்றிக் கவலைப்படும் பெரிய மனிதர்கள் முதலில் ஆண்களை ஒழுக்கமாக இருக்கச் சொல்லுங்கள் என்றார். இரண்டு பேரும் அப்படி நெறி தவறிப் போக வேண்டும் என்பது அவருடைய நோக்கமில்லை. "அப்போதுதான் நிலைமை சரிப்பட்டுப் போகும். உடனே உண்மையான சமரசம் தோன்றும்" என்று தன் நோக்கைத் தெளிவாக அவர் வெளிப்படுத்தினார்.

எப்போதுமே எதனையும் "ஓங்கிச் சொல்லுதல்" என்பது பெரியாரின் இயல்பு. அப்படிச் சொன்னால்தான், ஓரளவேனும் ஒத்து வருவார்கள் என்று அவர் கருதினார். உலகமே சிந்தித்துப் பார்க்காத காலத்தில், கர்ப்பத்தடை பற்றி பேசியவரும் பெரியார்தான்.

கர்ப்பத்தடை குறித்து *1930* ஏப்ரலில் குடிஅரசு இதழில் தலையங்கம் எழுதியுள்ளார். இந்திய அரசே, *1952*இல் தான், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது. அதற்கான மருத்துவ முறைகள் கூடத் தோன்றியிராத காலத்தில், பெரியார் கருத்தடை குறித்துப் பேசியது பெரு வியப்பு என்றே கூற வேண்டும். அவர் கருத்தை ஏற்றுத்தான், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்

கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?"

என்று கேட்டார். அதிலும் மிகச் சிறப்பான செய்தி எதுவெனில், அதற்குப் பெரியார் சொன்ன காரணம்தான். "பெண்களின் உடல் நலத்தை உத்தேசித்தும், பிள்ளைகளின் நன்மையை உத்தேசித்தும், நாட்டின் தரித்திர திசையை உத்தேசித்தும்,குடும்பச் சொத்து குறையாமல் இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும் கர்ப்பத்தடை அவசியம் என்று (மற்றவர்கள்) கூறுகின்றார்கள்" என்று கூறும் பெரியார், "பெண்கள் விடுதலை அடையவும், சுயேட்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகிறோம்" என்று முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் தன் கருத்தை வெளிப்படுத்துகின்றார்.

பெண்கள் மறக்கலாமா பெரியாரை? •

# நன்றி! நன்றி!! நன்றி!!!

## ஓராண்டு எங்களோடுப் பயணித்த அனைத்துத் தோழர்களுக்கும் நன்றி!

கைத்தடி பயணத்தில் பயணித்த அனைத்துத் தோழமைகளுக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியும் பேருவகையும் கொள்கிறோம்!

### நன்கொடையாளர்கள்

சின்னசாமி – முனியம்மாள், பஞ்சமூர்த்தி (கடலூர்), திருத்தணிகாசலம் (கடலூர்), அரவிந்த் (கடலூர்), வடலூர் சந்திரசேகரன் (கடலூர்), சரவணன் (தருமபுரி), கரு.பாலன் (தருமபுரி), இரா.பரிமளம் (தருமபுரி), R.K.சண்முகம் (தருமபுரி), காமராஜ் (தருமபுரி), கரு.அண்ணாமலை (சென்னை), இரா. ராஜா–தேவிகா (தருமபுரி), ஊமை ஜெயராமன், தகடூர் தமிழ்ச்செல்வி (தருமபுரி), மெரினா புக்ஸ் (சென்னை), மணிமாறன் (ஈரோடு), ஹரிஷ் கமுகக்குடி மாரிமுத்து (தஞ்சாவூர்), கனிமொழி (சென்னை), சிவா சடையன் (நாமக்கல்), கோபாலக்கிருஷ்ணன், கஜன் (லண்டன்), பெரியார்புக்ஸ்.இன் (சென்னை), சிட்டி பாபு (சென்னை), லதா–மணி (கிருஷ்ணகிரி), அ.செ.செல்வம்–செல்வி (கிருஷ்ணகிரி), தெ.ரங்கராசன் (எ) திராவிடராசன், அக்ரிடெக் (கடலூர்), கிளாசிக் சோலார் (தருமபுரி), கவிதா (வேலூர்), B.C.R மனோகரன் (தருமபுரி), மாதன் (தருமபுரி), முத்தையன் (தாம்பரம்), முகேஷ் (பாண்டிச்சேரி), செந்தமிழ்ச் செல்வி (திருவாரூர்), இரா. கிருஷ்ணமூர்த்தி (தருமபுரி), சி.ராமசாமி (தருமபுரி), சிவாஜி (தருமபுரி), மு.ராஜேந்திரன் (தருமபுரி), அ.மதியழகன் (விருதுநகர்), வீர.பாலன் (விருதுநகர்), சடகோபன் (வேலூர்), ஒசூர்AJ புத்தக உலகம், SPJ செல்வக்குமார் (மும்பை), ச.ராஜ்கமல் (சென்னை).

### களப்பணியாளர்கள்

சி.வீரவேல், அ.செ.செல்வம், கண்மணி–சு.வனவேந்தன், ஜோதி வெங்கடாசலபதி, புலவர் நாகை பாலு, தே.சுரேஷ், அரவிந்த், கவிதாரமேஷ், எஸ்.ஜெர்லின் பிரீமா, ஆர்.சையத் அன்வர் பாசா, ஜெ.தம்பிபிரபாகரன், தனுவசி தர்மராஜ், ஓவியர் சிகரன், தனுஷவன், பூபாலன், தேவிப்ரியா, மே.கா.கிட்டு, சண்முக ராமநாதன், செந்தில்குமார், சி.சிவபெருமான் – லோகேஷ், ஈ.சந்திரசேகர்.

### எழுத்தாளர்கள்

மு.சி.அறிவழகன், பார்த்திபன்.ப, கா.தமிழரசன், நா.காமராசன், சிவா சடையன், கு.முருகேசன், பழனி மதிவதனி, உஷாதீபன், தெ.ரங்கராசன் (எ) திராவிடராசன், நெல்லை சுப்பையா, டி.எஸ். எஸ்.மணி, நாகை பாலு, பழ.வெங்கடாசலம், மருத்துவர் யாழினி, ஷாலின், எம் ஞானசேகர், பூ.கொ.சரவணன், அ.தீ.ரமேஷ் கார்த்திக், எஸ். ஜெர்லின் பிரீமா, மழவை சு.பெ.தமிழமுதன், முரளிகிருஷ்ணன், சின்னதுரை, கா.ந.கல்யாணசுந்தரம், பா.கார்த்திகேயன், வழக்குரைஞர் கிருபா முனுசாமி, ராஜபார்த்திபன், இரவிச்சந்திரன், வழக்குரைஞர் கனிமொழி, கோவை சுபா, மா.கோ. முத்து, உ. திலகவதி, தேன்மொழி, வி.சி.வில்வம், உடுமலை வடிவேல், ச.அஜிதன் சந்திரஜோதி, கல்பாக்கம் சீனு, அகில், காமராஜ், செ.ஜனனி, பு.வேதவள்ளி, கௌசல்யா சங்கர், புதுவை மு.ந. நடராசன், கோபால கிருஷ்ணன், இரா.அன்பரசன், சுசிலா, க.அருள்மொழி, தனுஷவன், திருச்சி சந்தியா, பா. மணியம்மை, கரிஸ்மா.

### நேர்காணல் செய்ய அனுமதித்த ஆளுமைகள்

நடிகர் சத்தியராஜ், வழக்குரைஞர் அ. அருள்மொழி, எழுத்தாளர் ஓவியா, எழுத்தாளர் வே.மதிமாறன், பத்திரிகையாளர் ப. திருமாவேலன், தி.மு.க. தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள.புகழேந்தி, எழுத்தாளர் சல்மா, வழக்குரைஞர் தமிழன் பிரசன்னா, மருத்துவர் இரா.செந்தில், தமிழ் வளர்ச்சித் துறை மேனாள் இயக்குனர் மு. ராஜேந்திரன், CPI(M) டில்லி பாபு, மருத்துவர் திருத்தணிகாசலம்.

### மற்றும் சிலர்

கல்லூரி நண்பர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், பெற்றவர்கள், உறவினர்கள், தோழர்கள், அன்பு அண்ணா ச.பிரின்சு என்னாரெசு பெரியார், அச்சக உரிமையாளர்கள், தபால் நிலைய ஊழியர்கள், நிர்வாகிகள், அனைத்துக் கட்சித் தோழர்கள் மற்றும் அனைத்து இயக்கத் தோழர்கள், வாசகர்கள்.

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல் “கைத்தடி”யோடு பயணிப்போம் வாருங்கள்...!

**பயணங்கள் தொடரும்...**



■ கீழான இலட்சியத்தில் வெற்றி காண்பதை விட, உயர்ந்த இலட்சியத்தில் தோல்வி காண்பது சிறந்தது – பிரவுனிங்

*அறிவுள்ளவர்க்கு அறிவின் செயல்*
*அறிவல்லாதவனுக்கு ஆண்டவன் செயல்*

தந்தை பெரியார் அவர்கள் சொன்னது. இதைப் படித்த உடனே கோபம் உச்சந்தலைக்கு ஏறுவது இயல்பு தான், ஆனால் பொறுமையாக சிந்தித்துப் பார்த்தோமேயானால் உண்மை விளங்கும்.

உலகமே ஆண்டவனால் படைக்கப்பட்டது, அனைத்து உயிர்களையும் படைத்தவன் அவனே, அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று சொல்கிறது மதம். அது எப்படி என்ற கேள்வி எழுந்து அதற்குரிய பதிலை ஆய்வு செய்து பார்ப்போமேயானால், மனிதர்களை ஆண்டவன் தான் படைத்தான் என்றால், பெண்கள் கரு உருவாகிறார்கள், குழந்தை பெறுகிறார்கள் அந்த குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதற்கு மார்பகங்கள் தேவை, ஆனால் ஆண்களுக்கு எதற்கு பெண்களுக்கு இருப்பது போலவே மார்பகங்கள், தேவையில்லாமல் எதற்காக அந்த உறுப்பை ஆண்டவன் படைக்க வேண்டும்? மனிதன் உருவாக்கும் இயந்திரத்தில், பயன்பாடு இல்லாமல் ஒரு சிறிய பாகத்தை கூட இணைப்பதில்லை. மனிதனுக்குள்ள அறிவுக்கூட ஆண்டவனுக்கு இல்லையா? என்ற கேள்வி எழும்பொழுது, அதற்கு அறிவியல் தான் - மனநல மருத்துவர் ஷாலினி அவர்களின் மூலம் பதில் சொல்கிறது.

பெண்கள் கருத்தரிக்கும் பொழுது முதலில் பெண் உருவத்தில் தான் கரு உருவாகிறது, Y குரோமோசோம் இருப்பதால் டெஸ்டிஸ் விரைப்பை உருவாகி, அது டெஸ்டோசிரான் ஹார்மோனை உற்பத்தி செய்து அந்த வலிமையான டெஸ்டோசிரான் உடல் முழுவதும் பரவி கருவிலேயே பெண் உருவத்தில் உருவான குழந்தையை ஆண்மைபடுத்தி பெண் உருவத்தில் உள்ள கருவை ஆண் உருவத்திற்கு மாற்றுவதால் தான், பெண்களுக்கு இருப்பது போலவே ஆண்களுக்கும் மார்பகங்கள் உள்ளன. அந்த ஹார்மோனின் உற்பதி சரியான முறையில் இயங்கவில்லையென்றால் உடல் ஆணின் தோற்றத்தில் இருந்தாலும் பெண்ணாகவே இருக்க விரும்பி, பெண்ணாக மாறுவதற்குரிய முயற்சிகளைச் செய்து கொள்கிறார்கள். இதுவும் அறிவியலின் செயலே என்பதை உணர்ந்து இந்த சமூகத்தால் 'திருநங்கை' என்று அழைக்கப்படுபவர்களுடைய வலியையும் வேதனையையும் புரிந்து கொண்டு அவர்களின் மேல் இரக்கமோ பரிதாபமோ கொள்ளாமல், அவர்களுக்குரிய உரிமைகளை இந்த சமூதாயம் வழங்கினாலே போதுமானது.

ஆண்டவன் படைப்பு என்பது அறிவியலின் பார்வையின்படி பொய்யான கூற்று. குரங்கில் இருந்து தான் மனிதன் பிறந்தான் என்ற உண்மையை 24-11-1859 அன்று ஜீவராசிகளின் மூலம் என்ற புத்தகத்தை டார்வின் வெளியிட்டார். இது மதத்திற்கு எதிரானது என மதவாதிகள் கொதித்தெழுந்தனர். அதே போல் பூமி தட்டையாக அசைவற்று உள்ளது என்ற மதவாதிகளின் கருத்தை உடைத்து உலகம் ஓர் உருண்டை, அது ஒரு கோள், பூமி ஒரு சிறிய கோள், சூரியன் ஒரு நட்சத்திரம், சூரியனைச் சுற்றிதான் பூமியும் மற்ற கோள்களும் சுற்றி வருகின்றன, பூமி தன்னைத் தானே தனது அச்சில் 24 மணி நேரத்திற்கு ஒரு முறை சுற்றிக் கொண்டு, வருடத்திற்கு ஒரு முறை சூரியனையும் சேர்த்து சுற்றி வருகிறது என்ற உண்மையை முதன்முதலில் கண்டுபிடித்தவர் நிக்கோலஸ் கோப்பர்நிக்கஸ். இது மதக்கோட்பாட்டிற்கு எதிரான கருத்து என்பதால் எதிர்ப்பு வரும் என்று பயந்து 39 ஆண்டுகாலம் ஆய்வு செய்து கண்டுபித்த அறிவியல் உண்மைகளை வெளியிடாமல் இருந்துவிட்டு, பிறகு வயதான கடைசி காலகட்டத்தில் 1542 ஆம் ஆண்டு புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை



இர.அன்பரசன்



ரெடிகளிற்கு அனுப்பினார். அந்த கோப்பர் நிக்கசின் பூமி சுற்றுகிறது என்ற கொள்கைகளையும் தம்முடைய பிரபஞ்சம் பற்றிய கொள்கைகளையும் 1599 ஆம் ஆண்டு ரோம் நகர நீதிமன்றத்தில் ஜியார்டனோ புரூனோ கூறியதால் மத கொள்கைக்கு எதிரானது, இவர் ஒரு மத விரோதி என்று குற்றம்சாட்டி, 08-02-1600 அன்று சூரியன் உதிக்கும் முன்பே ரோம் நகர வீதியின் நடு பகுதியில் கட்டைகளை அடுக்கி உயிருடன் தீயிட்டுக் கொளுத்திக் கொன்றனர். அதன் பிறகு 17-ஆம் நூற்றாண்டில் இவருடைய கொள்கையையும் தத்துவத்தையும் அறிவியலையும் மதித்தனர். 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய தத்துவ அறிஞர்கள் பலர் இவருடைய தத்துவங்களை ஏற்றுக் கொண்டனர். புரூனோவை உயிரோடு எரித்துக் கொலை செய்யப்பட்டு 200 ஆண்டுகள் கழித்து 1880-ஆம் ஆண்டு புரூனோவை உயிரோடு எரித்துக் கொலை செய்யப்பட்ட அந்த இடத்திலேயே நினைவு சின்னம் அமைக்கப்பட்டு முப்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் புரூனோ வாழ்க என கோஷமிட்டனர்.

கி.பி. 150-ஆம் ஆண்டு காலகட்டத்தில் வாழ்ந்த மருத்துவ அறிஞர் காலன் என்பவர், கல்லீரலை மையமாக கொண்டு தான் இரத்தம் ஓடுகிறது என்றார். இவருடைய கருத்து 1200 ஆண்டுகளுக்கும் மேலாக நம்பபட்டு வந்தது. இரத்தத்தின் தொடக்கப்பகுதி கல்லீரல் அல்ல, இதயமே என்பதை முதன்முதலில் வெளியிட்டவர் வில்லியம் ஹார்வி. இவர் கருவியல் பற்றியும் ஆய்வு செய்து, 1651 ஆம் ஆண்டு விலங்குகளின் தலைமுறை என்ற புத்தகத்தை வெளியிட்டார். அரிஸ்டாட்டிலின் கருவளர்ச்சிக் கொள்கையை இவர் மறுத்துக் கருவின் வளர்ச்சி படிப்படியாக நடைபெறுகிறது என்பதை தெளிவுபடுத்தினார். இது மதத்திற்கு எதிரான கருத்து என்று, இவருடைய 40 ஆண்டுகள் சேகரித்து வைத்திருந்த ஆராய்ச்சிக் குறிப்புகளை மதவாதிகள் அழித்தனர். ஆனால், தற்பொழுது ஒப்பொரு ஆண்டும் மருத்துவத்தில் சிறந்து விளங்கும் மருத்துவருக்கு இராயல் மருத்துவக் கல்லூரிச் சார்பாக ஹார்வியின் நினைவு பரிசு வழங்கப்படுகிறது.

இதயம் இயங்குவதற்குரிய சத்து இல்லை என்றால் உடலில் இரத்த ஓட்டத்திற்குரிய சத்தும் இல்லாமல் போய்விடும். உடல் இயங்குவதற்குரிய சத்து போய்விட்டால், உடல் சத்து போய்விட்டது என்று சொல்லப்பட்டு நாளடைவில் சத்து போய்விட்டது என்ற வார்த்தைசெத்து போய்விட்டது என்று மாறி உள்ளது. மனிதன் செத்து போய்விட்டால் அவ்வளவுதான் அதன் பிறகு ஒன்றுமே இல்லை, ஆன்மா, சொர்க்கம், நரகம், பேய், பிசாசு, மறுபிறவி என்பதெல்லாம் மதவாதிகளின் பித்தலாட்டம் என்பது அறிவியலின் கூற்று.



இது போன்ற விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளை இருட்டடிப்பு செய்து, மதத்தின் மூலம் மக்களை மடையர்களாக்கவும் மதவாதிகளின் மதக்கோட்பாட்டை நிலை நிறுத்துவதற்காகவும் அவர்களை அச்சுறுத்துவது, சிறையில் அடைப்பது, உயிரோடு எரித்துக் கொலை செய்வது, கில்லட்டின் எனும் தலைவெட்டிக் கருவியைப் பயன்படுத்தி ஈவு, இரக்கமின்றி தலையை வெட்டிக் கொல்வது, பல ஆண்டுகள் இருட்டறையில் சிறை வைத்து சித்தரவதை செய்து, இனி எதையும் கண்டுபிடிக்க மாட்டேன் என்று சொல்லி மன்னிப்பு கேட்கும் விஞ்ஞானிகளை மட்டும் விடுதலை செய்வது போன்ற மனித நேயமற்ற செயல்களை மதவாதிகள் கடைப்பிடித்தனர்.

எங்கள் முன்னோர்கள் செய்த தவறுக்காக நாங்கள் வருந்துகிறோம், மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் என்று தற்பொழுதுள்ள மதவாதிகள் சொல்லி எளிதில் கடந்து சென்று விட்டு, அதுபோன்ற தவறுகளை இந்த காலகட்டத்திற்கு ஏற்றார்போல் நவீனமாக செயல்படுத்துகின்றார்கள். மன்னர்கள் ஆட்சியானாலும் மக்களாட்சியானாலும் மதவெறியர்களின் கையில் தான் நாடு சிக்கிக் கொண்டு இருக்கிறது, இது வரலாற்று உண்மையாக இருந்தாலும் மக்களின் அறியாமையை இந்த உலகம் தொடர்ந்து சுட்டிகாட்டி கொண்டே இருக்கிறது.

உலகத்தை படைத்தது ஆண்டவன் இல்லை என்ற உண்மையை அறிவியல் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. உலகத்தையே ஆண்டவன் படைக்காத பொழுது நாலுவர்ணங்களையும் ஆண்டவன் உருவாக்கினார் என்று சொல்வதும் பொய்யே. அப்படியென்றால் உருவாக்கியது யார்? உலகில் காணுகின்ற இயற்கையை தவிர்த்து அனைத்தையும் உருவாக்கியவன் மனிதன். எப்பொழுது மனிதனை மனிதன் அடிமைப்படுத்த நினைத்தானோ அன்று உருவாக்கப்பட்ட கொடிய விஷம் தான் இந்த மதங்கள், வர்ணாசிரமம், மனுதர்மம் போன்றவைகள்.

இதில் இருந்து நாம் விடுபடாமல் நம்முடைய நாடு சுதந்திர நாடு என்று சொல்லிக்கொள்வதில் அர்த்தமில்லை. 400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை மூடநம்பிக்கை நிறைந்த மதவெறி, ஜாதிவெறி பிடித்த வாழ்க்கை என்று நாம் இன்று கடுமையாக விமர்சனம் செய்வது போல் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அதே மூடநம்பிக்கை நிறைந்த மதவெறி, ஜாதிவெறிபிடித்த வாழ்க்கையை 400 ஆண்டுகள் கழித்து மிகமிகக் கடுமையாக விமர்சனம் செய்ய வருங்காலம் காத்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இன்னும் எத்தனை ஆண்டுகள் இந்த இழிநிலை தொடரும்? இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா? இது நாம் வாழ்கின்ற காலகட்டமாக ஏன் இருக்கக் கூடாது?

அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று சொல்வது மூடநம்பிக்கையின் உச்சம். அறிவியலின் ஓர் அணுவும் அசையாது என்று சொல்வது பகுத்தறிவின் உச்சம். ●



■ உன் முயற்சிகளை ஏளனம் செய்வோரிடமிருந்து விலகியே இரு. சிறியோரே அவ்வாறு செய்வர்; மாறாக, உண்மையான பெரியோரோ உன்னாலும் முடியும் என்று உன்னை உணர வைப்பர். - மார்க் ட்வைன்

# அன்றும்... இன்றும்.!

என்னடா தலைப்ப பார்த்தவுடனே எப்போதும் சொல்ற மாதிரி அந்த காலத்துல இப்படி இருந்தோம் ஆனா இந்த காலத்துல இப்படி இருக்காங்க மட்டும் சொல்லமாட்டோம். இந்த தலைப்பின் கீழ் வித்தியாசத்தை பற்றி பார்க்க போறோம். என்ன வித்தியாசம் கேட்கிறீர்களா? உங்க எல்லோருக்கும் தெரியும் உலகம் எவ்வளவு அதிவேகமாக போயிட்டு இருக்குனு, எல்லாரும் ஒரு நிமிடம் நின்னு யோசிங்க நாம் ஏன் இப்படி அதிவேகமாக போக வேண்டும் என்று, அன்று உலகம் இவ்வளவு வேகமாகச் செல்லவில்லை. மனிதன் மனிதனுக்கு மதிப்புக் கொடுத்து சுயநலமில்லாமல், "வந்தாரை வாழவைப்பவன்" என்று பெயர் எடுத்தான். இன்று உலகம் வேகமாகச் செல்கிறது என்று கூறி மனிதனுக்கே மதிப்பில்லாமல் சுயநலமோடு சென்று தமிழனின் பெயரைக் கெடுக்கிறாய். அன்று யாரிடமும் கைபேசி (*Android*, *Tab*) இவை எல்லாம் இல்லை, ஆனாலும் மக்கள் மக்களோடு கலந்து மகிழ்ச்சியோடு இருந்தனர். ஆனால் அதற்கு தலைகீழாக இன்று ஒரு மனிதனின் சந்தோஷம் வெறும் ஒரு கைபேசியில் அடங்கிவிட்டது. அன்று விவசாயத்திற்கு மதிப்பு கொடுத்து வாழ்ந்தனர். இன்றோ! ஒரு இடம் கிடைத்தாலும் அதை விற்கத் தான் பார்க்கிறார்கள். அது விவசாய நிலமே ஆனாலும் சரி அதை விற்று பணம் சம்பாதிக்கீறார்கள்.

## நாகரிகம்

நாகரிகம் வளர்ந்து விட்டது எனக் கூறி ஒவ்வொருவரும் உடுத்தும் உடைகள், பார்க்க பிச்சை எடுப்பவர்கள் போலவே காட்சியளிக்கிறார்கள். பிச்சை எடுப்பவர் கூட அடக்கஒடுக்கமாக துணி அணிந்து இருப்பர். ஒரு துணி கிழிந்து விட்டது என்றால் நாம் தூக்கித் துர போடுகிறோம். அதே துணி (கிழிந்த துணி) கடையில் பார்த்தால் *fashion* என்று கூறி வாங்குகிறோம். இது தான் இன்றைய நிலைமை ஆனால் அன்று மானம் காக்க தான் ஆடை, அந்த ஆடை சற்று கிழிந்தாலும், தன் உயிரைக் கூட மாய்த்துக் கொள்வர் ஏனென்றால் மானத்திற்கு அவ்வளவு மதிப்பு கொடுத்தனர். ஆனால் இன்றோ மானம் என்றால் என்ன? எந்த கடையில் விற்கிறது? என்று கேட்கும் நிலைமைக்கு வந்துவிட்டது இந்த உலகம் என்ன ஒரு கேவலமான உலகம் இது. கற்பு பறிபோனால் உயிரை விட்ட பெண்கள் எங்கே? கற்பை தினமும் குடிபோதையில் இழக்கும் பெண்கள் எங்கே? நாகரிகம் அப்படியே தான் இருக்கிறது. நாம் தான் மாறுகிறோம் என்று கூறிக் கொண்டு இருக்கிறோம். அன்றோ! குழந்தைகள் ஓடி ஆடி விளையாடினார்கள். இன்றோ அனைவரும் ஆன்ட்ராய்டு மொபைலைக் கொடுத்து நாமே நம் குழந்தையின் மூளை வளர்ச்சி *IQ* போன்றவற்றை குறைக்கின்றோம்.

## உணவு

எந்த உணவு நல்லது மற்றும் சத்துக் கொடுக்கக் கூடியது அனைவரும் களி, கம்பு போன்றவற்றை கேள்விப்பட்டதுண்டா. ஆம் அன்று சத்தான உணவு என்று களி, கம்பு சோளத்தைக் கூறுவார்கள். ஆனால் இன்றோ அனைத்தையும் *Plastic cover* ஆல் போட்டுக் கட்டி வைத்துவிடுகின்றனர். அதையும் நம் மக்கள் வாங்கி *Instant* உணவு என்று சாப்பிடுகின்றனர். இதெல்லாம் எவ்வளவு கெடுதல் என்று தெரியுமா? *Plastic cover* ஆல் கட்டிய பொருட்களில் $CO_2$ *Gas* மற்றும் உயிரைப் பறிக்கக்கூடிய விஷமும் கலக்கும் ஆனால் நம் கண் பார்வைக்கு தெரியாது. *Plastic cover* ஆல் கட்டிய பொருட்கள் ஏழு நாட்கள் மேல் போனால் அது விஷத்திற்கு சமம் ஆனது. அனைவரும் தயவுசெய்து நல்ல உணவை சாப்பிடுங்கள். அன்றோ பெண் என்பவளைத் தெய்வமாக மதித்தனர். அவளை மறு உயிர்க் கொடுப்பவள், குல தெய்வம் என்றெல்லாம் அழைப்பர். அப்படிப்பட்ட தெய்வத்தை



## ஓவியா மாதப்பன்



காக்க ஆண்கள் தன் உயிரைக் கூட விட தயார் ஆக இருப்பார்கள். அந்த தெய்வத்திற்கு ஏதாவது மானபங்கமோ! அல்லது அவளைக் கற்பழிக்க முயற்சி செய்தாலோ அவன் உயிர் கொடூரமான வழியில் இழக்க நேரிடும்.

இன்றோ! சற்று யோசிங்கள் அப்படிப்பட்ட ஆண் இவ்வுலகில் நூற்றில் ஒருவனோ (அ) ஆயிரத்தில் ஒருவனோ தான் இருப்பான். இன்றைய சூழ்நிலையில் ஒரு பெண் காலையில் வெளியே சென்று மாலையில் வீடு திரும்புவதே ஒரு உலக அதிசயமாக உள்ளது. இப்போதெல்லாம் ஒரு பெண்ணுக்கு ஆசைப்பட்டு, அந்த பெண் கிடைக்கவில்லை என்றால் அவளைக் கொலை செய்தல் கற்பழித்தல், உடம்பில் உள்ள அங்கங்களை வெட்டி தனித்தனியாக தூக்கி எறிதல் மற்றும் அவளை உயிரோடு எரித்தல் போன்ற நிகழ்வுகள் நடக்கிறது. சரி ஒரு பெண் வெளியே சென்று வீடு திரும்புவதற்குள் இவ்வளவு நடக்கிறது.

அதே போல் வீட்டிலும் அவள் பயந்து பயந்து இருக்க வேண்டிய நிலைமை, ஏனென்றால் இப்போதெல்லாம் பெத்த பெண்ணை கற்பழிக்கக்கூடிய தந்தைகளும் உறவினர் என்று சொல்லி, அவளை கற்பழிக்க இருப்பார்கள் (அ) அவளின் ஆபாச போட்டோக்களை காண்பித்து அவளை வற்புறுத்துதல் ஒரு பெண் இது எனக்கு வேண்டும் என்று கூறினால், உனக்கு அது வேண்டும் என்றால் என்னோடு உல்லாசமாக இரு என்று கூறுவதும் அதையெல்லாம் செய்தித்தாள்களில் பார்த்தால் இவ்வுலகை அழித்து மீண்டும் ஒரு புது உலகை உருவாக்க மாட்டானா என்றெல்லாம் தோன்றும். சமீபத்திய செய்திகளைப் பாருங்கள் ஒரு ஆண் ஒரு பெண்ணை குத்திவிட்டான். காட்டுத் தீ பரவும் அபாயம், விலைவாசி ஏறுதல் இறங்குதல்.

இதையெல்லாம் பார்த்தால் நமக்கே வெறுப்பாகிவிடும் ஆதலாம் மக்களே !

- **பெண்களைக் காக்க உதவுங்கள்.**
- **சிறிது தூரம் செல்ல வேண்டும் என்றால் மிதிவண்டியோ (அ) நடைபயிற்சியோ மேற்கொள்ளுங்கள்.**
- **நல்ல உணவைச் சாப்பிடுங்கள்.**
- **குழந்தைகளை நன்கு விளையாடவிடுங்கள், அவர்களையும் நம்மைப் போல், போன் அடிமை ஆக வழி விடாதீங்க.**
- **உடைகள் மீது கவனம் தேவை.**
- **உலகம் வேகமாகச் செல்கிறது என்று சொல்லாதீங்க! நாம் தான் வேகமாகச் செல்கிறோம்.**
- **மனிதனுக்கு உதவி தேவைப்பட்டால் செய்யுங்கள் அது அவன் உயிர் போகும் நிலைமையில் இருந்தாலும் சரி.**
- **மனிதனுக்கு மனிதன் மதிப்பு கொடுங்க**
- **விவசாயத்தைக் காப்போம் மக்களே!** ●

## இந்திரா



# ஐயா, ஆதலால் செய்வீர் கருணைக்கொலை

தொழும் தெய்வங்கள் அனைத்திற்கும் பெண்ணின் பெயர். நன்றி ! ஓடும் நதிகள் அனைத்திற்கும் பெண்ணின் பெயரிட்டு பெருமைப்படுத்தி இருக்கிறீர்கள். பேசும் மொழியையும் தாய் மொழி பிறந்த மண்ணையும் பாரதத்தாய் எனத் தாய்மையைப் போற்றுகின்றீர். மலர் போன்று மென்மையானவள் சந்திரனை போன்று குளுமையானவள் என்றெல்லாம் உவமைப்படுத்தி உயர்த்துகின்றீர். எம் சிரம் தாழ்ந்த நன்றி ஐயன்மீர். உங்களது பனிக்கட்டி மழையில் நாங்கள் நனைந்து குளிர்ந்து விட்டோம்.



நனைந்து குளிர்காய எரிமூட்ட நாளேடு ஒன்றை எடுத்தோம். ஐயா, மூன்று வயது சிறுமியை பாலியல் கொடுமைக்கு ஆளாக்கிய செய்தி கண்ணில் படுகிறது. எரித்தோம் அந்த நாளேட்டை. அடுத்த நாளேட்டை எடுத்தோம். மனநலம் குன்றிய பெண்ணை சூறையாடிய ஆண் அசுரர்கள் பற்றிய செய்தி கண்ணில்பட்டது. சீ! என அதையும் எரித்தோம். தீ நன்றாக கொளுந்து விட்டு எரிந்தது எம் வயிற்றைப்போல். இன்னொரு நாளேட்டை எடுத்தோம். பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட பெண்ணின் பெண்ணுறுப்பில் மரக்கட்டையை சொருகி அந்த உறுப்பை சிதைத்த ஆண் சிங்கங்களின் வீர சாகசத்தைப்பற்றிய செய்தி கண்ணில் பட்டது. அதனையும் எரித்தோம். ஐயா. ஆனால் எம்மால் இப்பொழுது குளிர்காய இயலவில்லை. அடுத்த நாளேட்டைப் பிரித்தோம். ஹோலி என்ற பெயரில் விந்தணுக்களை நிரப்பிய பலூனைப் பெண்கள் மீது வீசி கொக்கரித்து இந்த நாட்டின் "தூண்கள்" நம் மாணவர்களைப் பற்றிய செய்தி. ஐயா இப்பொழுது எரியத் துவங்கியது எம் உடம்பு. எல்லாம் வெறுத்து கடைசியாக ஒரு நாளேட்டை எடுத்து பிரித்தோம். பெண்களிடம் தவறாக நடந்ததற்காக தென்னிந்திய கவர்னர் ஒருவரை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்கிறது என்று. "வேலியே பயிரை மேய்கிறது ஐயா"

எங்களை மூன்றாவது இனமாக அங்கீகரிக்கவில்லை எனில் எங்களை கருணைக்கொலை செய்துவிடுங்கள் என உங்களிடம் முறையிட்டாலாமே திருநங்கை ஒருத்தி. ஐயா! அதை போன்று நாங்களும் வேண்டி கேட்டுக்கொள்கிறோம். ஐயா, கருணைக் கொலை செய்யுங்கள், எம்மை அல்ல ஆண்டாண்டு காலமாய் எம்மை சூறையாடும் அங்கீகரிக்கப்பட்ட ஆண்வர்க்கத்தையே! நன்றி ஐயா! ●



▪ நியாயமில்லாத விமர்சனம்கூட ஒரு விதத்தில் பாராட்டேயாகும். நீ ஒருவரின் பொறாமையைத் தூண்டிவிட்டாய் என்பதையே இது காட்டுகிறது. - டேல் கார்னஜி

# மாட்டிறைச்சியும் மனிதக்கொலையும்!

## ஒரு வரலாற்றுப் பின்னணி

வேதங்களிலும் தர்ம சாஸ்திரங்களிலும் உள்ள ஆதாரங்களைக் கொண்டு தனது ஆய்வை ஆழப்படுத்திய அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறார்.

“இவற்றை எல்லாம் கொண்டு பார்க்கும்போது பார்ப்பனர்கள் மாட்டிறைச்சியைச் சாப்பிட்டது மட்டுமல்ல, யாகங்களில் விலங்குகளைக் கொல்பவர்களாகவும் இருந்து வந்தனர் என்பதற்கு இதற்கு மேல் சான்றுகள் ஏதும் தேவையில்லை என்றே தோன்றுகிறது.”

சரி இப்படி மாட்டைக்கொன்று தின்ற பார்ப்பனர்கள் சைவ உணவுக்கு மாறிய கதையை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கூறுகிறார் படியுங்கள்.

‘இவ்வாறிருக்கும்போது பிராமணர்கள் ஏன் களம் மாறினார்கள்? ஏன் திசை மாறினார்கள்? அவர்களிடையே ஏற்பட்ட மாற்றத்தை இரண்டு கட்டங்களாகப் பார்ப்போம். முதலாவதாக, மாட்டிறைச்சி சாப்பிடுவதை அவர்கள் ஏன் கைவிட்டார்கள்?.

மனுதடுத்தாரா?- மனுஸ்மிருதி கூறுவது என்ன?

*V.28* ‘‘படைப்புகளின் அதிபதியான ப்ரஜாபதி உயிர்களுக்கு ஆதாரமாக இந்த உலகம் முழுவதையும் படைத்தார்: அசைவன, அசையாதன அனைத்தும் இந்த உயிர்களுக்கு உணவே ஆகும்.”

*V.29* “இதில் தவிர்க்க முடியாதது எதுவெனில், கோரைப் பற்கள் உடையவை கோரைப்பற்களில்லாதவற்றுக்கு இரையாவதும், கரங்களற்றவை கரங்களைக் கொண்டவற்றுக்கு இரையாவதும், கோழை தைரியசாலிக்கு இரையாவதும்தான்.”

*V.30* ‘‘பிரத்தியேகமாக உணவுக்காகவே படைக்கப்பட்டதை உண்பது பாவமாகாது: ஏனென்றால் உண்பவர்களையும் உண்ணப்படுபவற்றையும் கடவுளே படைத்திருக்கிறார்”.


*V.56* “மாமிசம் உண்பது பாபமில்லை: மதுவருந்துவதும் குற்றமில்லை: பாலுணர்ச்சி கொண்டு உடலுறவு கொள்வதிலும் தவறில்லை: இவையெல்லாம் உயிர்ப்பிராணிகளின் இயல்பாகும், எனினும் இவற்றைத் தவிர்ப்பது பெரும் நன்மை பயக்கும்”.

*V.27* ‘‘நீர் தெளித்து மந்திரம் ஓதி, புலால் உண்ணலாம், விதிமுறைப்படி சமயச்சடங்கில் ஒருவர் ஈடுபட்டிருக்கும்போது, பிராமணர்கள் விரும்பினாலும், ஒருவர் உயிர் ஆபத்தில் இருக்கும்போதும் மாமிசம் உண்பதில் தவறில்லை”.

*V.31* ‘‘தெய்வங்கள் வகுத்துத்தந்த விதியின்படி, யாகத்திற்காக இறைச்சி சாப்பிடுவது ஏற்புடையதே: ஆனால் மற்ற சமயங்களிலும் விடாது மாமிசத்தை உண்பது ராட்சதச் செயலாகும்.”

*V.32* ‘‘தெய்வங்களுக்கோ மூதாதையர்களின் ஆவிகளுக்கோ மரியாதை செய்யும்போது, வாங்கியோ, விலங்கை தானே கொன்றோ அல்லது மற்றவர்களிடமிருந்து பரிசாகப் பெற்றோ மாமிசம் உண்பது தவறில்லை.”

*V.42* ‘‘வேதத்தின் உண்மையான பொருளை அறிந்த இருமுறை பிறந்தவன் (பார்ப்பனன்) இந்த நோக்கங்களுக்காக ஒரு பிராணியைக் கொன்றால் அவனும் அந்தப் பிராணியும் நற்கதி அடைவார்கள்.”



# வழக்கறிஞர் அ.அருள்மொழி - நேர்காணல் - தொடர்

*V.39* "சுயம்புவே (தானாகத் தோன்றியவர்) யாகங்களுக்காக விலங்குகளைப் படைத்தார்: இந்த உலகம் முழுவதன் நலனுக்காகவே யாகங்கள் தோற்றுவிக்கப்பட்டன: எனவே, யாகத்திற்காக விலங்குகளைக் கொல்வது அந்த சொல்லின் வழக்கமான பொருளில் கொல்வதாகாது.



*V.40* "மூலிகைகள், மரங்கள், கால்நடைகள், மற்றும் ஏனைய விலங்குகள் யாகங்களுக்காக அழிக்கப்பட்டால் அவை மீண்டும் பிறக்கும்போது உயர்ந்த நிலையை அடைகின்றன."

*V.35* ''ஒரு புனிதச் சடங்கில் உரியமுறையில் ஈடுபட்டிருப்பவன் அதாவது அதை முன்னின்று நடத்துபவன் அல்லது அந்தச் சடங்கில் விருந்துண்பவன் இறைச்சி உண்ண மறுத்தால், இறந்தபின் 21 பிறவிகளில் ஒரு பிராணியாக இருந்து வருவான்."

இவை யாவற்றிலுமிருந்து, புலால் உண்பதை மனு தடை செய்யவில்லை என்பது தெளிவு. அதுமட்டுமல்ல, பசுவதையை மனு ஸ்மிருதி தடை செய்யவில்லை என்பதையும் மனு ஸ்மிருதியிலிருந்தே மெய்ப்பிக்க முடியும்.

ஒரு தாடையில் மட்டும் பற்கள் கொண்ட எல்லா வீட்டு வளர்ப்புப் பிராணிகளின் இறைச்சியைச் சாப்பிடலாம் என்று பொதுவான அனுமதியை இந்த சுலோகத்தின் மூலம் மனு வழங்குகிறார். இந்தப் பொதுவான விதிக்கு மனு ஒரே ஒரு விதிவிலக்கை மட்டும் அளிக்கிறார். அதுதான் ஒட்டகம், ஒரு தாடையில் மட்டும் பற்களை உடைய வீட்டு வளர்ப்புப் பிராணிகள் பட்டியலில் ஒட்டகம் மட்டுமின்றி பசுவும் இடம்பெறுவது அனைவருக்கும் தெரியும். ஆனால் அப்படியிருந்தும் மனு பசுவுக்கு விதிவிலக்கு அளிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எவரும் பசுவின் இறைச்சியை உண்பதில் மனுவுக்கு எத்தகைய ஆட்சேபமும் இல்லை என்பதையே இது காட்டுகிறது.

பசுவதையை மனு ஒரு குற்றமாகக் கருதவில்லை, பாவங்களை மனு இரண்டாகப் பிரிக்கிறார். *(i)* மாபாவங்கள் *(ii)* சிறு பாவங்கள்,

மாபாவங்கள் பட்டியலில் மனு பின்கண்டவற்றைச் சேர்க்கிறார்.

ஓ*1.55.* பிராமணனைக் கொல்வது, சுராபானம் எனப்படும் மதுவருந்துவது, பிராமணனுக்குச் சொந்தமான பொன்னைத் திருடுவது, குரு பத்தினியுடன் உடலுறவு கொள்வது, இத்தகைய குற்றவாளிகளுடன் உறவாடுவது.

சிறுபாவங்கள் வரிசையில் மனு பின்கண்டவற்றைச் சேர்க்கிறார்.

ஓ*1.60.* பசு வதை, தகுதியில்லாததற்கு யாகம் செய்வது, கூடா ஒழுக்கம், பிறரைப் பகைத்துக் கொள்வது, அன்றாடம் வேதம் ஓதுவதை நிறுத்துவது, ஆசிரியர், தாய், தந்தை அல்லது மகனைப் பழிப்பது, வீட்டுப் புனித நெருப்பைப் புறக்கணிப்பது."

பசுவைக் கொல்வது சிறிய பாவமே என்று மனு கருதுவது இதிலிருந்து தெளிவாகிறது. போதிய காரணமின்றிப் பசுவைக் கொல்வதுதான் வெறுக்கத்தக்கது. மற்றபடி பசுவதை கொடியதோ அல்லது விலக்கமுடியாததோ அல்ல. யாக்ஞவல்கியரின் கருத்தும் இதுதான்.

இவை யாவும் எதைக் காட்டுகின்றன? தலைமுறை தலைமுறையாக, வழிவழியாக பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி உண்டு வந்திருக்கின்றனர் என்பதையே இவை புலப்படுத்துகின்றன. அப்படியானால், அவர்கள் ஏன் மாட்டிறைச்சி உண்பதை விட்டனர், உச்சக்கட்ட நடவடிக்கையாக மாமிசத்தை அறவே ஒதுக்கிவிட்டு மாங்கனிக்கு மாறுவானேன்?

கேள்விகளைக் கேட்ட அண்ணல் அம்பேத்கர் அவர்களே பதிலும் சொல்கிறார் படியுங்கள்மேற்கொண்டு..

'இரண்டு புரட்சிகளின் சங்கமம் என இதனைக் கூறலாம். பிராமணர்களது தெய்வீக சட்டவல்லுநரான மனுவின் உபதேசங்களால் இந்தப் புரட்சிகரமாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. அவரது ஆணைகளைப் புறக்கணித்தே இந்தப் புரட்சி நடைபெற்றிருக்கிறது. இத்தகைய ஒரு நடவடிக்கையைப் பிராமணர்கள் ஏன் மேற்கொண்டார்கள்? தத்துவத்தின் தூண்டுதல் இதற்குக் காரணமா? அல்லது இது வெறும் ஒரு தந்திரோபாயமா?

இதற்கு இரண்டு விளக்கங்கள் கூறப்படுகின்றன. ஒரு விளக்கம் பசுவைத் தெய்வீக சக்தியாகப் போற்றுவது, அத்வைத சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. யாவற்றுக்கும் மேலான, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு சக்தி பிரபஞ்சம் முழுவதும் படர்ந்து பரவியிருக்கிறது. அவ்வகையில் எல்லா மனித ஜீவன்களும், விலங்குகளும் புனிதமானவை என்கிறது இந்த அத்வைத சித்தாந்தம். இவ்விளக்கம் திருப்திகரமானதல்ல என்பது வெள்ளிடைமலை. முதலாவதாக, உண்மைகளுடன் இது பொருந்தவில்லை. அனைத்து உயிர்களும் ஒன்றே என்று பிரகடனம் செய்யும் வேதாந்த சூத்திரம் கூட (11.1.28) யாக நோக்கங்களுக்காகப் பிராணிகள் பலியிடப்படுவதைத் தடுக்கவில்லை. இரண்டாவதாக, அத்வைத இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற ஆர்வமே இந்த மாற்றத்துக்குக் காரணம் என்றால், பசுவுடன் மட்டும் அது ஏன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்குத் தகுந்த முகாந்திரமே இல்லை. இதர விலங்குகளைப்பற்றியும் அது கூறியிருக்க வேண்டும்.



▪ நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்குக் கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்குத் தகுதியானது உங்களுக்குக் கண்டிப்பாகக் கிடைத்தே தீரும்.

இரண்டாவது விளக்கம் முதல் விளக்கத்தை விடவும் சாமர்த்தியமானதாக இருக்கிறது: ஆன்மா ஒரு உடலிலிருந்து இன்னோர் உடலுக்கு மாறுகிறது என்னும் சித்தாந்தம் மேன்மேலும் செல்வாக்கு பெற்றுவந்ததன் காரணமாகவே பிராமணர்களின் வாழ்க்கையில் இந்த மாற்றம் ஏற்பட்டது என்கிறது இந்த விளக்கம். ஆனால் இந்த விளக்கமும் எதார்த்த நிலைமைகளுக்குப் பொருந்துவதாக இல்லை. ஆன்மா கூடுவிட்டுக் கூடுபாய்கிறது என்ற சித்தாந்தத்தை ஆதரிக்கும் (VI-2) பிருகதாரணியக உபநிடதம்கூட தனக்கு அறிவாற்றல்மிக்க ஒரு மகன் பிறக்க வேண்டும் என்று ஒருவன் விரும்பினால் பொலிமாடு அல்லது எருதின் அல்லது வேறு ஏதேனும் இறைச்சியை சாதத்துடனும் நெய்யுடனும் கலந்து படையல் வைக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது. உபநிடதங்கள் முன்வைக்கும் இந்தச் சித்தாந்தம் மனுஸ்மிருதி காலம்வரை ஏறத்தாழ 400 வருடங்கள் பிராமணர்களிடம் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாதிருந்தது என்பது புரியாத புதிராக இருக்கிறது. இந்த விளக்கம் விளக்கமே இல்லை என்பது கண்கூடு. மூன்றாவதாக, ஆத்மா உடல் விட்டு உடல் மாறுகிறது என்ற சிந்தாந்தம் காரணமாகவே பிராமணர்கள் காய்கறி உண்பவர்களாக மாறினார்கள் என்றால், அந்த சித்தாந்தம் பிராமணரல்லாதவர்களையும் மரக்கறி உண்பவர்களாக ஏன் மாற்றவில்லை?



இப்படி பார்ப்பனர்கள் சொன்ன ஒவ்வொரு காரணத்தையும் அறிவின் உரைகல்லில் உரசிப் பார்த்து அவை எந்த விதத்திலும் பொருத்தமானவையாக இல்லை என்று நிராகரித்த அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வரலாற்றின் படிக்கப்படாதப் பக்கங்களைக் கொண்டு உண்மையான காரணத்தை நிறுவினார்.

‘பிராமணர்கள் ஏன் திடீரென்று பசுவை வணங்க ஆரம்பித்தார்கள் என்ற புதிருக்கான விடையை புத்த மதத்திற்கும் பிராமணீயத்துக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தில் காணலாம்: புத்தமதத்தின்மீது தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் ஒரு சாதனமாகவே பிராமணீயம் பசு வழிபாட்டை மேற்கொண்டது எனலாம். பௌத்தத்துக்கும் பிராமணீயத்துக்கும் இடையே நடைபெற்ற போராட்டம் இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையாகும். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், இந்து சமயத்தின் சில முக்கிய அம்சங்களை விளக்குவது சாத்தியமில்லை, துரதிருஷ்டவசமாக இந்திய வரலாற்று மாணவர்கள் இந்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை அறவே உணரத் தவறி விட்டனர்.

இந்தியாவில் பிராமணீயம் இருந்து வந்தது அவர்களுக்குத் தெரியும். ஆனால் தத்தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு பிராமணீயமும் பௌத்தமும் நடத்தி வந்த போராட்டத்தையும், சுமார் 400 வருட காலம் நீடித்த இந்தப்போராட்டம் இந்தியாவின் சமயத்திலும், சமுதாயத்திலும், அரசியலிலும் அழிக்க முடியாத சில முத்திரைகளைப் பதித்ததையும் இவர்கள் முற்றாகக் காணத் தவறிவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

மாட்டிறைச்சி உண்பதை பிராமணர்கள் நிறுத்தியதன் நோக்கம் பௌத்த பிட்சுக்களிடமிருந்து மேலாதிக்கத்தைக் கைப்பற்றுவதே என்பது பிராமணர்கள் மரக்கறி உணவுக்கு மாறியதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. பிராமணர்கள் சைவ உணவாளர்களாக மாறியது ஏன்? பீராமணர்கள் மரக்கறி உணவாளர்களாக மாறவில்லை என்றால், தங்களுடைய எதிராளிகளிடமிருந்து அதாவது புத்த மதத்திடமிருந்து தாங்கள் இழந்த செல்வாக்கை மீட்க முடியாது என்பதே இக்கேள்விக்கு அளிக்கக்கூடிய சரியான பதிலாக இருக்க முடியும். புத்தமதத்துடன் ஒப்பிடும்போது பிராமணீயம் பொது மக்களின் நன்மதிப்பை இழக்கக் காரணமாக இருந்த ஒரு அம்சத்தை இங்கு நினைவுகூருவது அவசியம். பிராணிகளைப் பலியிடும் நடைமுறையே அந்த அம்சம். இது பிராமணீயத்தின் அடிப்படை சாராம்சமாக இருந்தது. அதேசமயம் புத்த மதம் இதைக் கடுமையாக எதிர்த்தது.

எனவே விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட பெருவாரியான மக்களிடையே புத்தமதம் மதிப்பும் மரியாதையும் பெற்றிருந்ததும், பசுக்கள், எருதுகள் உட்பட பிராணிகளைக் கொன்று குவிக்கும் பிராமணீயத்திடம் அவர்கள் அருவருப்பு கொண்டிருந்ததும் முற்றிலும் இயல்பே. இத்தகைய நிலைமையில் பிராமணர்கள் தாங்கள் இழந்த செல்வாக்கை எவ்வாறு மீட்க முடியும்? இறைச்சி உண்பதைக் கைவிடுவதன் மூலமும், மரக்கறி உண்பவர்களாக மாறுவதன் மூலமும்தான் இதைச் சாதிக்கமுடியும். இதைத்தான் அவர்கள் செய்தார்கள். பிராமணர்கள் சைவ உணவாளர்களாக மாறியதன் நோக்கமே இதுதான் என்பதை பல்வேறு வழிகளில் மெய்ப்பிக்க முடியும்.

இப்படி ஆதாரப்பூர்வமாக பார்ப்பனர்கள் சைவ உணவாளர்கள் ஆன வரலாற்றினை விளக்கியதுடன் மிக அடிப்படையான இரண்டு செய்திகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். 1. மனு பசுவின் மாமிசம் உண்பதை ஆதரித்தார்.

2.மனுவின் சட்டத்திற்கு எதிராக பசுவைக் கொல்ல தடை விதித்தவர்கள் இந்து மதத்தை ஆட்சியில் அமர்த்திய குப்த மன்னர்கள்.

இந்தியாவின் வரலாற்றில் குப்தர் காலம் பொற்காலம் என்று பார்ப்பனர்கள்எழுதி வைத்ததன் காரணமும் இதுவே.

சரி பார்ப்பனர் அல்லாத மக்களிடையே மாட்டுக்கறி உண்பவர்கள் கீழானவர்கள் என்கிற எண்ணமும் தீண்டாமையும் எப்படி ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பார்ப்போமா??

**– நேர்காணல் தொடரும்**


▪ எல்லோருமே உலகை மாற்றிவிடத் துடிக்கின்றனர். ஆனால், எவரும் முதலில் தங்களை மாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பதில்லை! -லியோ டால்ஸ்டாய்

கு.முருகேசன்

# தமிழர் விளையாட்டுகள்



தமிழகத்தின் கிராமங்களில் எந்த விதமான விளையாட்டுக் கருவிகளும் இன்றி சிறுவர்கள் இரவு பகல் என எந்த நேரத்திலும் விளையாடும் விளையாட்டே இந்த ஆபியம் என்னும் விளையாட்டாகும். இதை தென்னகத்தில் பச்ச குதிரை விளையாட்டு என்றும் அழைக்கிறார்கள். இந்த விளையாட்டை பழங்காலத்தில் அரசர்கள் மற்றும் அவரது படைவீர்கள் இந்த விளையாட்டின் மூலம் தங்களது போர் திறனை வளர்த்துக்கொண்டார்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அத்தகைய விளையாட்டை விளையாடும் சிறுவர்களும் போர்த் திறமையையும் உடல் வலிமையையும் வளர்த்துக்கொள்வதாகவே கருதுகிறார்கள்.

இந்த விளையாட்டை எத்தனை சிறுவர்கள் வேண்டுமானாலும் குழுவாக சேர்ந்து விளையாடலாம். இந்த விளையாட்டில் ஒருவர் குதிரை போல் குனிந்து கொள்வார் மற்றவர்கள் குனிந்தவரின் முதுகில் கையை ஊன்றி குனிந்தவரின் ஒரு பக்கத்தில் இருந்து அடுத்த பக்கத்திற்குத் தாண்டுவார்கள். அவ்வாறு தாண்டும் போது குனிந்தவர் மீது தன் கால்கள் படாமல் தாண்ட வேண்டும். ஒருவேளை தாண்டுபவர் கால் குனிந்திருப்பவர் மீது பட்டுவிட்டால் தாண்டுபவர் தோற்றவர் ஆவார். அவர் மீண்டும் குனியவேண்டும் மற்றவர்கள் எல்லாம் குனிந்தவர் முதுகை கையால் ஊன்றித் தாண்டவேண்டும். யார் முதலில் குனிய வேண்டும் என்பதை தீர்மானிக்க விளையாட்டில் கலந்துகொள்வோர்கள் எல்லாம் சேர்ந்து சாட் பூட் திரி மூலம் முடிவு செய்வார்கள்.




குனிந்திருப்பவர் முதுகைத் தாண்டும் போது

*"ஆபியம்....*
*மனியாபியம்...*
*இஷ்ட்டாபியம்...*
*லாகரச்சி கொக்கு.....*
*ராஜா சூத்துல ஒத குடு..."*

என்று பாடிக்கொண்டே குனிந்தவரின் முதுகைத் தாண்டுவார்கள். இந்தப் பாடலில் இன்னொருவகை

*"ஆபியம்...*
*மனியாபியம்...*
*இஷ்ட்டாபியம்...*
*குரங்காபியம்...*
*நகரத்தின் எல்லைக் கோடு...*
*குட்டிச் சாத்தான் மண்ணைத் தின்றான்...*
*தற... தற... சூத்துல உதை!"*

என்றும் சிலர் பாடிக்கொண்டு தாண்டுவது உண்டு.

ஆட்டத்தில் ஒருவர் குனிந்து நிற்க மற்றவர்கள் அவரின் முதுகில் கை வைத்து, வரிசையாக மற்றவர்கள் தாண்ட வேண்டும். முதல் முறை ஆபியம்... என்று சொல்லித் தாண்டும்போது, குனிபவர், தன் கையை கால் விரல்களைத் தொட்டபடி குனிந்திருக்க வேண்டும். இரண்டாவது இஸ்டாபியம் என்று சொல்லித் தாண்டும்போது தன் கைகளை கால் விரல்களிலிருந்து ஒரு ஜாண் உயரத்திலும், மூன்றாவது தாண்டலுக்கு முட்டிகளையும், நான்காவது ஆபியத்தில் இடுப்பிலும் கை வைத்து நிற்க வேண்டும். இப்படியே பத்து ஆபியம் வரை கை மேலே மேலே உயர்ந்துகொண்டே இருக்கும். யார், முதுகைத் தாண்ட முடியாமல் இருக்கிறாரோ, அவர் அடுத்ததாகக் குனிந்து நிற்க வேண்டும். இது உயரம் தாண்டுதலில் ஒவ்வொரு முறையும் கோல்களின் உயரத்தை அதிகப்படுத்துவதற்கு ஒப்பாகும்.

கால்களை அகலமாக்கி வைத்துக்கொள்வதிலும், கைகளால் உடம்பை உயர்த்தி வைத்துக் கொள்வதிலும் தான் இந்த ஆட்டத்தின் வெற்றியின் ரகசியம் ஒளிந்திருக்கிறது. இந்த விளையாட்டு எதையும் தாங்கும் உடல் வலிமையைக் கொடுப்பதோடல்லாமல் எப்பொழுதும் கவனமா செயல்படவும் இந்த விளையாட்டு சொல்லிக்கொடுக்கிறது. மேலும் தசைகளை உறுதியாக்கவும், மூட்டு சேரும் இடங்களை உறுதியாக்கவும், எலும்பு வளர்ச்சிக்கும் இந்த விளையாட்டு உதவுகின்றன. இந்த விளையாட்டு பழங்காலத்தில் மன்னர்களும் அவரின் வீரர்களும் போரில் ஈடுபடும்போது எதிர்படும் உயர்ந்த சுவர்களைத் தாண்டுவதற்கும், குதிரையின் மீது ஏறுவதற்குமான பயிற்சியாக விளங்கியதாம். அதனால்தான் இந்த விளையாட்டை பச்ச குதிரை என்றும் அழைத்திருக்கிறார்கள்.

எனவே நம் குழந்தைகளுக்கு ஆளைத் தாண்டி விளையாடும் ஆபியம் விளையாட்டை சொல்லிக்கொடுப்போம். அவர்கள் வாழ்க்கையில் தடைகளைத் தாண்டி வளர்வார்கள்.

**– இன்னும் விளையாடலாம்**

 ▪ முயற்சியை எவனொருவன் கைவிடுகிறானோ,அப்போதே அவன் திறமை அவனிடமிருந்து போய் விடுகிறது -எமர்சன் 



# வரும் முன் காப்போம்

மார்ச் 4, 2018. அன்று உலகம் முழுதும் உள்ள பல நாளேடுகளின் வலைத்தளங்கள், "ஆஸ்திரேலியாவில் இன்னும் நாற்பதே ஆண்டுகளில் *cervical cancer* என்ற கருப்பைவாய்ப் புற்றுநோய் ஒழிக்கப்படும்", என்ற ஒரு அதிமுக்கிய செய்தியினை தாங்கியிருந்தது. "*Rome wasn't built in a day*" என்ற பழமொழிக்கு ஏற்ப, இந்த அளப்பரிய சாதனை இன்று நேற்று நிகழ்ந்த ஒரு அதிசயத்தால் உருவானது கிடையாது. 2007ஆம் ஆண்டில் இருந்து நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின் வாயிலாகச் சிறார்களுக்கும் சிறுமிகளுக்கும் அளிக்கப்பட்ட கருப்பை வாய்ப் புற்றுநோயினை தடுக்கக்கூடிய தடுப்பூசியின் வழி, இப்புற்றுநோய்க்கு காரணமான நோய்த்தொற்றின் சதவிகிதம், இத் தடுப்பூசி சிகிச்சையினை எடுத்துக்கொண்டவர்களின் மத்தியில், 24%இல் இருந்து வெறும் 1% ஆக குறைந்திருப்பது வெகு சமீபத்தில், ஆய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் நிகழும் இந்த மாற்றம் குறித்து உலகம் ஏன் இத்தனை கவனம் கொள்ளவேண்டும் என்ற கேள்வி உங்கள் மனதினில் எழலாம். அதற்கான பதில், இப்புற்றுநோயினை ஏற்படுத்தும் நோய்த்தொற்றிக்கான காரணியின் வீரியத்தில் இருக்கிறது. இந்நோய்த் தொற்றினை ஏற்படுத்தும் காரணியின் பெயர் *Human Papilloma Virus*. இந்தியப் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் வகைகளில் எண்ணிக்கை அளவில் முதலிடம் பிடிப்பதும், உலக அளவில் பெண்களுக்கு ஏற்படும் இரண்டாவது பொதுவான புற்றுநோய் வகையாக இருப்பது, இந்த கருப்பை வாய்ப் புற்றுநோய்.

கருப்பை வாய்ப் புற்றுநோயினை தடுப்பதற்கு எண்ணற்ற வழிகள் இருப்பினும் தடுப்பூசியின் வழி அதனைத் தடுத்தல் சிறப்பானதொரு வழியாக கண்டறியப்பட்டு, தற்பொழுது 2 வகை தடுப்பூசிகளை ஆய்வின் வழி உருவாக்கியுள்ளனர். கருப்பை வாய்ப் புற்றுநோயின் தீவிரம் எத்தகையதென்றால் உலக அளவில் ஒவ்வொரு வருடமும் ஐந்து லட்சம் மக்களுக்கு இப்புற்றுநோய் தாக்கி, சுமார் 3 லட்சம் பேர் இதனால் உயிரிழக்கின்றனர்.

முன்பு கூறியதைப் போன்று, இந்தியப் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் வகைகளில் முதன்மையானது கருப்பை வாய்ப் புற்றுநோய். இவ்வகைப் புற்றுநோயினை உண்டு செய்யும் நோய்த்தொற்றிற்கு ஆளாகக்கூடிய 15 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் நம் நாட்டில் கிட்டத்தட்ட 36 கோடி பேர் இருக்கின்றனர். தற்போதைய கணக்கெடுப்பின் வழி கண்டறிந்த செய்தி என்னவென்றால், ஒவ்வொரு வருடமும் சுமார் ஒன்றரை லட்சம் பெண்களுக்கு இவ்வகை புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டு, தோராயமாக 75 ஆயிரம் பேர் இப்புற்றுநோயினால் பலியாகிறார்கள் என்பதே. இந்தத் தரவின் படி, உலக அளவில் இப்புற்றுநோயினால் ஏற்படும் இறப்புகளில் மூன்றில் ஒன்று இந்தியாவில் நிகழ்கிறது. ஆக, ஆஸ்திரேலியாவில் நிகழும் இந்த முன்னேற்றத்தினை மற்ற நாடுகளை விட இந்தியா இன்னும் தீவிரமாய் உற்றுநோக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

தற்பொழுதைய ஆய்வின் படி, பாலுறவில் ஈடுபடும் பெண்களில் 80% பேர், பிறப்புறுப்பில் HPV நோய்த்தொற்றினை தங்களது ஐம்பதாவது வயதிற்குள் பெற்றுவிடுகிறார்கள். இந்த தரவு மாத்திரமே இந்நோய்த்தொற்றின் தீவிரத்தை நமக்கு உணர்த்தக்கூடியதாய் இருக்கிறது. சரி. இந்த நோய்த்தொற்று எப்படி நிகழ்கிறது என்று பார்ப்போம்.

*HPV* என்ற *Human papilloma virus* தொடுதல் மூலம் பரவும் ஒருவகைத் தொற்று. பிறப்புறுப்பில் பாலுறவு கொண்டாலோ, வாய் வழி பாலுணர்வைத் தூண்டும் *oral sex* கொண்டாலோ, இயற்கைக்கு மாறான குதம் வழி பாலுறவு கொண்டாலோ அல்லது கைகளினால் பிறப்புறுப்பினைத் தொடுவதன் வாயிலாகவும் இந்நோய்த் தொற்று ஏற்படலாம். இதில் கவனம் கொள்ளவேண்டியது என்னவென்றால், காண்டம் பயன்படுத்துவதன் வழி இந்நோய்த் தொற்றினை



தடுக்கமுடியாது என்பதே. காரணம், காண்டம் பிறப்புறுப்பினை முழுமையாக மூடக்கூடியதாக இல்லாதிருப்பதால். அதே நேரம், இந்நோய்த் தொற்று, பொருட்களைத் தொடுவதன் வழி ஏற்படுவதில்லை, எடுத்துக்காட்டு: கழிவறை சீட். 15 வயது முதல் 25 வயது வரை உள்ள ஆண்கள், பெண்கள் என இருபாலரில் பெரும்பான்மையானவர்கள் இந்நோய்த் தொற்று ஏற்பட்டு இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். அதே நேரம் இந்நோய்த் தொற்று ஏற்பட்டவரில், பெரும்பான்மையானவர்களுக்கு தொற்று ஏற்பட்டதற்கான எந்த வித அறிகுறிகளும் தென்படாது, அதனால் எவ்வித பிரச்சனைகளும் ஏற்படாது.

அவர்களில் 10 முதல் 20 சதவிகிதப் பெண்களுக்கு இந்நோய்த்தொற்று நிலைத்திருக்கும் என்றும் சொல்லப்படுகின்றது. ஆக, இதுவே பின்னாளில் புற்றுநோயினை உண்டு செய்யும் முக்கிய காரணியாக மாறுகிறது. பின்னாளில் என்றால், சுமார் 20 முதல் 25 வருடங்கள். ஆக வழக்கமான சோதனைகளின் வழி மாத்திரமே கருப்பை வாயினில் வழக்கத்திற்கு மாறான மாற்றங்களைச் சரியாக நாம் கண்டறிந்து, இப்புற்றுநோயினை அது முழுமையாக ஏற்படுவதற்கு முன்னமே கண்டுபிடித்து, தகுந்த சிகிச்சையினை மேற்கொள்ள முடியும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இப்புற்றுநோய்க்கு HPV நோய்த்தொற்றே முதன்மையான காரணம் என்று நாம் சொல்லும் அதேவேளையில் அது மாத்திரமே இத்தொற்றினை புற்றுநோய்க்கு இட்டுச்செல்வதில்லை என்பதையும் நாம் அறிதல் வேண்டும். வெகு காலம் ஹார்மோன் சார்ந்த கருத்தடை மாத்திரைகளை உட்கொள்வது, இளம் வயதில் இருந்தே பாலுறவில் ஈடுபடுவது, பலருடன் உடலுறவில் ஈடுபடுவது, புகையிலை உட்கொள்வது, புகைப்பது, மற்றும் HIV நோய்த்தொற்று போன்றவை HPV நோய்த்தொற்றை புற்றுநோயாக உருமாறுவதற்கு வழி வகுக்கும் உப காரணிகள் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதோடு HPV நோய்த்தொற்றோடு இணைந்த கிளாமிடியா (Chlamydia) நோய்த்தொற்று, herpes வைரஸ் நோய்த்தொற்று, குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி, சத்தில்லாத ஆகாரம், வறுமை, சுத்தமின்றி இருத்தல், ஆகாரத்தில் மிகக் குறைந்த antioxidants ஆகியவையும் உப காரணிகளாக இருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

தற்பொழுது வரை சுமார் 100 வகையான HPV நோய்க்கிருமிகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் நாற்பதுக்கும் மேலான வகைகள் கருப்பை வாயினில் நோய்த்தொற்று ஏற்படுத்தக்கூடியதென்றும், அதில் சுமார் 15 வகைகள் கருப்பை வாய்ப்புற்றுநோயினை ஏற்படுத்தும் சாத்தியத்தை பெற்றிருப்பதாக அறியப்பட்டுள்ளது.

எனவே இதில் இருந்து காத்துக்கொள்ள, உடனடியாக உங்கள் மருத்துவரை அணுகி, இது குறித்த மேற்கொண்ட தகவல்களையும், கருப்பை வாய்ப் புற்றுநோயினில் இருந்து காத்துக்கொள்ள இருக்கும் வழிவகையான தடுப்பூசி பற்றியும் அவசியம் கேளுங்கள். முக்கியமாக பெண்பிள்ளைகளைப் பெற்றவர்கள், உங்கள் மருத்துவரிடம் இது குறித்து விசாரித்து காலத்தே அவர்களுக்கு இந்நோய்த் தடுப்புச் சிகிச்சையினை அளிக்க முயலுங்கள்.

வரும் முன் காப்பதே என்றும் நலம்.

# அன்பு சகோதர சகோதரிகளுக்கு

## மு.சி.அறிவழகன் எழுதுவது...!

**தங்கை :** அண்ணா எனக்கு கல்யாணம் ...

**அண்ணன் :** மகிழ்ச்சி வாழ்த்தும் அன்பும்

**அண்ணன் :** சரி டா மா எத்தனையாவது கல்யாணம் டா இது உனக்கு ..?

**தங்கை :** அண்ணா என்ன பேசுறீங்க ..?

**அண்ணன் :** இல்ல மா மாத்தி கேட்டுட்டேன் முறையா இப்படி தா கேட்டு இருக்கனும் " உனக்கு எத்தனை புருசன் " அவன எத்தனையாவதா கல்யாணம் பன்ன போற ..?

**தங்கை :** அண்ணே நா நல்ல குடும்பத்தில் பொறந்த பொண்ணு இப்படி பேசுறீங்க அம்மாட்ட சொல்லிடுவேன்.

**அண்ணன் :** இதை நா சொல்லல டா உங்க சாஸ்திரம் மந்திரம் சொல்லுது ...

**தங்கை:** அண்ணா அது திருமண புனித மந்திரம்

**அண்ணா :** மந்திர அர்த்தம் தெரியுமா டா உனக்கு ..?

**தங்கை :** இல்லை அண்ணா ...

**அண்ணன் :** அதாவது முதலில் உன்னை சோமன் கல்யாணம் செய்து கொள்கிறான், இரண்டாவதாக கந்தர்வன் கல்யாணம் செய்து கொள்கிறான், மூன்றாவதாக அக்னி உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறான், மூன்றுபேர் போதாது என்று மந்திரம் சொல்லும் புரோகிதர் நான்காவதா உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறார் , இறுதியா போனால் போகிறது என்று உனக்கு பார்த்த மாப்பிள்ளை ஐந்தாவதா உன்னை கல்யாணம் செஞ்சி உன்னோடு வாழ்க்கை நடத்துவார். இதுதான் அந்த மந்திரம்.

**அண்ணன்:** இதனால் உனக்கு எத்தனை புருசன், எத்தனையாவது கல்யாணம் னு கேட்டேன் டா ம்மா...

**தங்கை :** அண்ணா நா மாமாவை மட்டும் திருமணம் செய்யனும் சுயமாய் வாழனும் என்ன செய்ய

**அண்ணன் :** சுயமரியாதை இயக்கத்தில் இணை, சுயமரியாதை திருமணம் செய்து சுயமரியாதையோடு வாழ் !

**தங்கை :** சுயமரியாதை இயக்கம் நா எது அண்ணே !

**அண்ணன் :** தந்தை பெரியார் அமைத்த பகுத்தறிவு இயக்கமே சுயமரியாதை இயக்கம் டா செல்லம் ...

சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு!

சிந்திப்பீர்! என் அன்பு சகோதர சகோதரிகளே...!



▪ நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சயமில்லை; இன்றைக்கு மட்டுமே நம் கையில்.

# புரட்சியாளர் எப்படித் தலைவரானார்?



காந்தி ஒரு சீர்திருத்தவாதி ஆனால் அம்பேத்கர் அவர்களோ சமூகப் புரட்சியாளர். சீர்திருத்தவாதி பழைய கட்டிடத்தைப் புதுப்பிப்பவர், புரட்சியாளர் அவர்களோ பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடத்தை கட்டுவார்.

ஒடுக்கப்பட்ட மக்கள் கல்விகற்க வேண்டும் என்பதற்காக விடுதிகளைத் திறத்தல், அம்மக்கள் நல்ல முன்னேற்றம் பெறுவதற்காக, கலாச்சார தன்மையிலிருந்து உயர்த்திட வேண்டி நூலகங்கள், சமூக மையங்கள், பயிற்சி வகுப்புகள், வாசகர் வட்டங்கள் ஆகியவற்றை அமைத்தல், அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டி தொழில் மற்றும் வேளாண்மை பயிற்சி பள்ளிகளைத் தொடங்குதல் ஆகிய கொள்கைகளை முன்னிறுத்தி புரட்சியாளர் அம்பேத்கர் அமைப்பு ஒன்றை நிறுவ முன்வந்தார். இந்த அமைப்பின் முக்கிய நோக்கமே ஒடுக்கப்பட்ட மக்கள் தாழ்ந்த இடத்திலிருந்து முன்னேறி சமுதாயத்தில் மற்ற சமூகத்திற்கு இணையாக கல்வி பெற்று சமூகம் மற்றும் அரசியல் என எல்லா துறைகளிலும் முன்னேற வேண்டும் என்பதாக இருந்துவந்தது.

தீண்டப்படாத மக்கள் அனைவரையும் மேலே உயர்த்துவதற்காக ஒரு இயக்கத்தை அமைத்திட வேண்டும் என்று முடிவு செய்து 1924 மார்ச் மாதம் பம்பாய் தாமோதர் அரங்கில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் தீண்டப்படாதவர்கள் துயரங்கள் நீக்கவும் அவர்களுடைய கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துக்கூறுவதற்கும் ஒரு மத்திய அமைப்பை ஏற்படுத்துவதன் தேவைப்பற்றி பேசப்பட்டது. 1924 ஜூலை 20ஆம் தேதி பகிஷ்கிரித் ஹித்தகாரினி சபா என்ற அமைப்பு நிறுவப்பட்டது, நிர்வாகக்குழுவின் தலைவராக புரட்சியாளர் அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒடுக்கப்பட்ட சமூகத்திற்காக பாடுபட பல அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் இருந்தாலும், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் புதிய ஒரு பாதையை வகுத்தார். ரானடே அவர்கள் தொடங்கிய சமூக மாநாட்டில் விதவை மறுமணம், பெண்களுக்குச் சொத்துரிமை, பெண்கல்வி, குழந்தை மணம் போன்றவற்றில் மட்டுமே கவனம் செலுத்தினார்.

புரட்சியாளர் அவர்கள் தொடங்கப்பட்ட அமைப்பு சாதியை ஒழித்து இந்த சமூகத்தை சமஉரிமை அடிப்படையில் திருத்தி அமைக்க வேண்டும் என்பதை

## இரா.ஆதிமொழி

மாநில கொள்கைபரப்பு து.செயலாளர், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி






புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் மனதில் **எப்போதும் மேலோங்கி நின்றது என்னவென்றால்** நவீன விஞ்ஞான சாதனங்களையும், தகுதி மற்றும் **சான்றுடைய ஆசிரியர்களைக்கொண்ட ஒரு சிறந்த** கல்வி நிறுவனத்தை நிறுவவேண்டும் என்பதே **ஆகும்.தீண்டப்படாத வகுப்பினருக்கு உயர்கல்வி** வழங்க வேண்டும் என்பதே புரட்சியாளர் **அவர்களுடைய நீண்ட நாள் கனவாகும்.**

மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தது.

புரட்சியாளர் அவர்கள் எல்லா திசைகளிலும் வந்த விமர்சனங்களையும் சிந்தித்துக் கொண்டிருந்தார். எல்லா விமர்சனங்களையும் தகர்த்தெரிய வேண்டுமென்றால் தமக்கென்று ஒரு பத்திரிகை இருக்க வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தார். சரியான எண்ணத்தையும் கொள்கைகளையும் முன் வைத்திடவும், கட்சியின் செயல்பாடுகள் மற்றும் கோரிக்கைகளை வெளிப்படுத்தவும் பத்திரிகை தேவையாயிருந்தது. பகிஷ்கிரித் பாரத் என்ற பத்திரிகையை மாதம் இருமுறை வெளியிட்டு வந்தார். தான் தொடங்கிய பத்திரிகையின் மூலம் தன்னுடைய கருத்துக்கள் நோக்கங்கள் இவற்றை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதினார். மேலும் பலபேரின் விமர்சனங்களுக்கு தகுந்த பதிலளித்தார். எந்தவிதமான அச்சமுமின்றி தன்னுடைய உணர்ச்சிகளைச் சுருக்கமாக அடுத்தடுத்து எழுதிவந்தார்.

இந்திய வரலாற்றில் 1930ஆம் ஆண்டு எல்லாவற்றிலும் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாக அது திகழ்ந்தது. மகாத்மா காந்தி 1930இல் நாட்டின் விடுதலைக்காக ஒரு இயக்கத்தை ஆரம்பித்து தண்டியாத்திரை நடத்துவதற்கு முன்னரே இந்திய சமூகப் புரட்சியின் தந்தையான அம்பேத்கர் அவர்கள் கோயில் நுழைவுப் போராட்டத்தை முன்னணித் தோழர்களின் மூலமாக வழிகாட்டி எழுச்சியூட்டி அப்போராட்டத்தை வலுப்படுத்தினார்.

அதே வேளையில் புகழ்பெற்ற காலாராம் கோயிலைத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காக திறக்காவிடில் சத்தியாக்கிரகம் செய்வோம் என்றும் அக்கோயில் அறங்காவலருக்கு தெரிவிக்கப்பட்டது. அத்தகைய உரிமையை பெறும்படியாக நாராக்கில் தீண்டப்படாத மக்கள் அனைவரும் அணிதிரளவேண்டும் என்று மக்களுக்கு எழுச்சிமிக்க புரட்சிகரமான வேண்டுகோள் அம்பேத்கரால் விடப்பட்டது.

சத்தியாக்கிரகக் குழுவின் வேண்டுகோளை ஏற்று 15000 தொண்டர்கள் தீண்டப்படாத மக்கள் வாழும் பகுதியில் பந்தலில் கூடினார்கள். 1930 மார்ச் 2ஆம் தேதி புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் தலைமையில் மாநாடு தொடங்கியது. மாநாட்டிற்கு வந்தவர்கள் நான்கு நான்கு பேராக அழகாக வரிசையில் நின்றார்கள். அந்த வரிசையானது ஒரு மைல் தூரத்திற்கு நீண்டது. நாசாக்கின் வரலாற்றில் அதுதான் மிகப்பெரிய ஊர்வலமாகும்.500 பெண் சத்தியாக்கிரகிகள் பெண்ணுலகின் புரட்சிகரமான மாற்றத்தின் அடையாளமாக வீர நடையிட்டனர். கோயிலின் நான்கு நுழைவாயில்களும் மூடப்பட்டு இருந்தது. அங்கே மாவட்ட நீதிபதி, மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் நகர நீதிபதி ஆகியோர் கோயில் நுழைவாயில் அருகே வந்தார்கள். கோயில் மூடப்பட்டதால் அந்த ஊர்வலம் பொதுக்கூட்டமாக மாற்றப்பட்டது. கடவுளான இராமனே நேரில் வந்து தீண்டப்படாத மக்களுக்கு கோயிலை திறந்துவிடுமாறு நேரில் சொல்லி இருந்தாலும் வெறிபிடித்த சாதி இந்துக்கள் இராமனையே தூக்கி எறிந்திருப்பார்கள்.


புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் மனதில் எப்போதும் மேலோங்கி நின்றது என்னவென்றால் நவீன விஞ்ஞான சாதனங்களையும், தகுதி மற்றும் சான்றுடைய ஆசிரியர்களைக்கொண்ட ஒரு சிறந்த கல்வி நிறுவனத்தை நிறுவவேண்டும் என்பதே ஆகும். தீண்டப்படாத வகுப்பினருக்கு உயர்கல்வி வழங்க வேண்டும் என்பதே புரட்சியாளர் அவர்களுடைய நீண்ட நாள் கனவாகும். "மக்கள் கல்விக் கழகம்" என்ற அமைப்பை உருவாக்கினார்.

1946 ஜூன் 20ஆம் தேதி ஒரு கல்லூரியைத் தொடங்கி விருப்பமுடன் பணியாற்றக்கூடிய அலுவலகர்களை அமர்த்தி மிகுந்த வெற்றிகண்டார். நாளடைவில் இந்தியாவில் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகப் புரட்சியாளர் உருவாக்கிய கல்லூரித் திகழ்ந்தது.ஆரம்பநாட்களில் புரட்சியாளரின் நண்பர்கள் முயற்சியைக் குறித்து குறைவாக மதிப்பிட்ட அவர்கள் புரட்சியாளரைப் பாராட்டினார்கள். அந்தக் கல்வி நிறுவனத்திற்கு "சித்தார்த்தா கல்லூரி" என்று பெயரிடப்பட்டது. இவ்வாறாக ஒரு சமூகத்தின் விடிவெள்ளியாகப் புரட்சியாளர் பயணத்தைத் தொடர்ந்தார். ●



■ இருட்டைச் சபித்துக் கொண்டிருப்பதை விட்டு விட்டு ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுங்கள். – **கன்பூஷியஸ்.**

கவிஞர். நா.காமராசன் மண்டகொளத்தூர்






## லெனின்

கேள்விக்குறிகளை
வியப்புக்குறியாக்கியவன்!
உழைக்கும் கைகளில் இவன்
செவ்வாளாய் மிளிர்ந்தவன் !

அதிகாரவர்க்கக் கோட்டை
பொடிபொடியானது!
இவன் கட்டி எழுப்பிய
மக்கள் செம்படையால்!

ஏட்டில் எழுதியதை
நாட்டில் அரங்கேற்றினான்!
உழுபவனுக்கே நிலம்
உழைப்பவர்க்கே அதிகாரம்!

அடிமைச்சங்கிலி அறுந்து
விழுந்தது!
மண்ணில் முதலாய்
சமத்துவம் செழித்தது!

## அண்ணல் அம்பேத்கர்

தொட்டால் தீட்டு
பார்த்தால் தீட்டு
அத்தனைக்கும் மொத்தமாய்
வைத்தான் வேட்டு!

இவன் எழுத்துக்களெல்லாம்
தோட்டாக்களாய் துளைத்தது!
சாதி அழுக்கு கோட்டையை
நொறுக்கித்தகர்த்தது!
முடங்கிக் கிடந்த சமூகத்தை
ஓயாமல் தட்டினான்!
என்றோ ஒருநாள் விழிக்குமென்ற
நம்பிக்கையில்!

கற்பி, ஒன்றுசேர், புரட்சிசெய்
கூடவே கலகம் செய்தான்!
காட்டாறாய் சீறிஎழுந்தது
கண்ணீர் துடைத்து மானுடர்கூட்டம்!

## தந்தை பெரியார்

மனிதனை மனிதனாக மட்டும்
பார்த்தவன்!
சூத்திரன்,பஞ்சமன் என்றவனை
வீதியில் தீயிட்டு எரித்தவன்!

முடங்கிக்கிடந்த சமூகத்தில்
நொண்டியாய்க் கிடந்தவனுக்கு
ஊன்றுகோலானது;
ஈரோட்டுக் கைத்தடி!

அடுப்படி தாண்டாத பெண்களை
ஆகாயம்வரை கூட்டிச்சென்றது
இவனின் சிந்தனைச் சிறகுகள்;
இதோ பார்முழுதும் பறவைகளாய்
பாராளும் வீராங்கனைகள்!

வெள்ளைக்காரன் கொடுத்த
விடுதலை கொள்ளைக்காரனுக்கு!
துள்ளிகுதிக்க ஏதுமில்லை
இனி விடுதலைபெறுவதே
முதல்வேளை; நாள்தோறும்
முழங்கினான் போர்முழக்கம்

டெல்லிக்காரனின் உறவைமுறி
விடுதலைக்கனலை காற்றில் எறி
பூணூல் தேசம் பொசுங்கட்டும்
அன்னைத்தமிழகம் விழிக்கட்டும்;
வீதிதோறும் இவனின் கலகக்குரல்!

இவனின் காலடி தடத்திலெல்லாம்
மானுடம் தழைத்தது!
தமிழ்த்தேசம் தாண்டி மானுடம்
செழித்தது!

புரட்சியாளர்களே!

உங்களை சிலையென
நினைத்தது மூடர்கூட்டம்
இல்லையில்லை
விடுதலைத்தனல் என
கொதித்தது அகிலம் எங்கும்!

பூணூல் கயிறு பதுங்கிக்கொண்டது
கயவர்கூட்டம் நடுங்கிநின்றது
மானுட விடுதலை முடியாமல்
உங்கள் போர்க்குரல் என்றும் ஓயாது! •


▪ முடியாது என்று சொல்வது மூட நம்பிக்கை! முடியுமா என்று கேட்பது அவநம்பிக்கை!
முடியும் என்று சொல்வதே தன்னம்பிக்கை!


மனித நேயத்தின் மறுபரிணாமம்
வெண்புறா
இது கல்விக்கான மாபெரும் புரட்சி வழி
V P F
Venpura
இலவச மது மற்றும் புகையிலை ஒழிப்பு முகாம் மும்பை மற்றும்
சிறுகுறு தொழில் செய்வதற்கான இலவச பயிற்சி முகாம்
எமது தயாரிப்புகள்
மது பழக்கத்தில் இருந்து விடுபட
பான், பீடி, புகையிலை பழக்கத்தில் இருந்து விடுபட
ச.செல்வகுமார்
நிறுவனர் மற்றும் தலைவர்
இயற்கை மற்றும் ஆர்கானிக் தேயிலை
Jora
புத்துணர்ச்சி பெறும்
நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
சிறுவர் முதல் பெரியவர்கள் வரை
அனைவருக்கும் பொருந்தும்
மேலும் விபரங்களுக்கு
Venpura Foundation Venpura Corporation P.Ltd.,
Jora Life Care IIP, SPJ Enterprises, 250/B, 2nd Floor, Phonex Paragon Plaza, Kamani, Kurla (West), Mumbai- 400 070. www.venpura.in info@venpura.in
022-29744514/ 022-49744515, 99307 20123


VETRI
VETRI ENTERPRISES
(KARTHIK INSTITUTE)
Recognised by TN Govt. (Rec. No.280258)
180/2, Taluk Office Road, Near Balaji Theatre, Hosur, Krishnagiri District.
COMPUTER LEARNING IN COMPUTER ON OFFICE AUTOMATION (TN TECHNICAL BOARD)
TYPEWRITING & SHORTHAND
PROJECT WORK
TRANSLATION
DOCUMENTATION




FROM
S.Veeravel
Plot no.45 S1 Aves Castle,
Auditors colony,
Mannivakkam,
Chennai-600048
EDITOR & PUBLISHER:
ARIVAZHAGAN CM
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com

Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.